Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00




நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 05 (29.12.2003) திங்கட்கிழமை இதழ் :89

# கூட்டணி எம்.பிக்களைப் பயன்படுத்தி புலிகள் தன்னைப் பயமுறுத்துவதாக சங்கரியார் கூறுவது சுத்தப் பொய்!

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் எம்மைப் பயன்படுத்தி தன்னைப் பயமுறுத்துவதாக ஆனந்தசங்கரி தெரிவித்திருப்பது ஒரு கற்பனைக்கதை. விடுதலைப் புலிகள் அவ்வாறு எம்மை ஒன்றுக்கும் பயன்படுத்தவில்லையென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, ரவிராஜ் மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரைப் பயன்படுத்தி, புலிகள் தன்னைப் பயமுறுத்துவதாக 'ஏசியன் ரிபியூன்'

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயிரம் மலையக இளைஞருக்கு விடுதலைப் புலிகள் பயிற்சியாம்!

## இராணுவப் புலனாய்வுப் பிரிவு கூறுகிறது

(கொழும்பு)

பெரும் எண்ணிக்கையான மலையக இளைஞர்களுக்கு விடுதலைப் புலிகள் பயிற்சியளித்து வருவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

போர்நிறுத்தம் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை சுமார் ஆயிரம் மலையக இளைஞர்களுக்கு விடுதலைப் புலிகளால் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பயிற்சிபெற்ற இளைஞர்கள், தமது செயற்பாடுகளை மலையகத்தில் ஆரம்பித்துள்ளதுடன், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை மலையக இளைஞர்கள் மத்தியில் பரப்புரை செய்வதாகவும் இராணுவப் புலனாய்வுப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்தப் பிரச்சினை தொடர்பாக தியவதன நிலமேயை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ சந்தித்து உரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரசியல் நெருக்கடியைக் காரணம் காட்டி

# உறுதியளித்த நிதியுதவியை வழங்க சர்வதேச சமூகம் பின் நிற்கக்கூடாது!

## உதவி வழங்கும் நாடுகளிடம் வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை

(கோலாலம்பூர்)

**இலங்கைக்கு வழங்கவென சர்வதேச சமூகத்தால் உறுதியளிக்கப்பட்ட 4.5 மில்லியன் டொலரை, தற்போதைய அரசியல் நெருக்கடியைக் காரணம் காட்டி உதவி வழங்கும் நாடுகள் வழங்குவதற்கு பின்னடிக்கவோ அல்லது பொறுமையை இழக்கவோ கூடாது என சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ.**

மலேசியாவில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

பிரதமர் ரணிலின் அரசாங்கம் சாத்தியப்பாடான விதத்தில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை நடத்துகிறது. இந்தப் பிரச்சினைக்கு சர்வதேச சமூகத்தின் உதவியும் தேவை என்பதை அரசாங்கம் புரிந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சை பிரதமர் ரணில் அரசாங்கத்திடம் ஜனாதிபதி வழங்க வேண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்திலுள்ள அகதிகள் திரும்ப தனியான கப்பல் வசதிக்கு ஏற்பாடு!

## அமைச்சர் ருக்மன் சேனநாயக்க தெரிவிப்பு

(சென்னை)

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை மீள அழைக்கத் தனிக் கப்பல் வசதிசெய்யப்படுமென, சுற்றுச்சூழல் அமைச்சர் ருக்மன் சேனநாயக்க தெரிவித்தார்.

தமிழ்நாடு - இராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற ஒரு நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற சமயம் ஊடகவியலாளர் மத்தியில் உரைநிகழ்த்தியபோது அவர் இத்னைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தமிழகத்தில் சுமார் 1 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களை இலங்கைக்கு மீளவும் அழைப்பதற்காக தனிக் கப்பல்சேவை ஒன்று ஆரம்பமாகவுள்ளது.

தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் வரை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண பிரதான கட்சிகள் இணையவேண்டும்!

## புலிகளின் விருப்பமும் அதுவே என்கிறார் சந்திரிகா

(கொழும்பு)

தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதில் நாட்டின் அனைத்துக் கட்சிகள் மத்தியிலும் குறிப்பாகப் பிரதான கட்சிகள் இரண்டின் மத்தியிலும் இணக்கம் ஏற்படவேண்டும் என்பதையே தமிழீழ விடுதலைப் புலிகளும் வலியுறுத்துவதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் விருப்பமாகும். யுத்தமொன்றுக்குச் செல்வதை நானோ, கட்சியோ ஏற்றுக்கொள்ளவில்லை.

நாட்டின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது எனது பொறுப்பு. மூன்று அமைச்சுக்களை நான் பொறுப்பேற்றதை, அரசியலமைப்புப் பிரச்சினையாக பிரதமர் ரணில் கருதுவதை நான் ஆட்சேபிக்கிறேன். இதன்மூலம் சமாதான முன்னெடுப்புக்கள் ஸ்தம்பிதம் அடைந்ததாக அவர் மக்கள் முன் காட்ட முனைகின்றார். இது தவறான வழிநடத்தலாகும்.

நான் அமைச்சுப் பொறுப்புக்களைப் பொறுப்பெடுப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னரேயே சமாதானப் பேச்சுக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சு இல்லாமல் சமாதான முயற்சியை மேற்கொள்ள முடியாதென பிரதமர் கூறுவது யதார்த்தமற்ற கருத்தாகும். தக

(10 ஆம் பக்கம் பார்க்க)

**எயிட்ஸினால் பாதிக்கப்பட்டோரை இழிவாகப் பார்க்காது, ஒதுங்காது, சமூகத்தில் ஒருவராக ஏற்று, பரிவுடன் நடத்தல் வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.**

# காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் நீதி அமைச்சின் முன்பாக இன்று மறியல்!




வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோரின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் யாழ்.மாவட்ட அன்னையர் முன்னணியினர் இணைந்து இன்றும் நாளையும் கொழும்பிலுள்ள நீதியமைச்சின் முன்னும் மனித உரிமைகள் அமைப்பின் தலைமைக் காரியாலயத்தின் முன்னும் வழிமறிப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத் தலைவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாத எந்தப் பேச்சுக்களும் வெற்றிபெறாதாம்!

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாத எந்தச் சமாதானப் பேச்சுக்களும் வெற்றியடையப் போவதில்லை.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள செய்தி ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்ளவேண்டும் என்ற விடயத்தில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

இந்த விடயம் குறித்து- அரசாங்கத்தினாலும், விடுதலைப் புலிகளினாலும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேண்டும். முஸ்லிம்கள் கலந்துகொள்ளாத எந்தப் பேச்சுவார்த்தைகளும் வெற்றியடையப் போவதில்லை. முக்கியமாக - ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான பாதுகாப்பு முரண்பாட்டை, இருவரும் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்பதே முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு. பாதுகாப்பு தொடர்பான பொறுப்பை ஜனாதிபதியும், பிரதமரும் பகிர்ந்து கொண்டு செயற்படுவதுதான் நாட்டின் நலனுக்கு உகந்தது.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பாக, இரண்டு வருடகாலமாக அவ்வப்போது நடைபெற்ற சில சம்பவங்களால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்குக் காரணம் - அரசும், பொலிஸாரும் உரிய தருணத்தில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளாமையேயாகும். பல சந்தர்ப்பத்தில் பாதுகாப்புத் தொடர்பான செயற்பாடுகளுக்கு புலிகளும் ஒத்துழையாமையே ஒரு காரணமாக அமைகிறது. இது சமாதானத்திற்கு இடையூறாக அமையலாமென ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

# 680 வெடிவிபத்து சம்பவத்தில் 729 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த ஒரு வருடங்களில் படையினரால் கைவிடப்பட்ட வெடிபொருட்களால் ஏற்பட்ட 680 வெடி விபத்துச் சம்பவங்களில் 729 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வெடிவிபத்துச் சம்பவங்களில் 67பேர் கொல்லப்பட்டுள்ளனர். 337 பேர் கால்களை இழந்துள்ளனர். 28 பேர் பார்வையிழந்துள்ளனர். 293 பேர் வேறு வகையில் அங்கவீனம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் கணிசமான அளவினர் சிறுவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு 43 சுத்திகரிப்பு தொழிலாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவிய தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் நோக்கில், யாழ். போதனாவைத்தியசாலை நிர்வாகத்தினர் மேற்கொண்ட தீவிர முயற்சியின் பலனாக - புதிதாக 43 சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமனம்பெற்ற 43 பேரையும், யாழ். போதனாவைத்தியசாலைக்கு உடனடியாகச் சமுகமளித்து, தமது நியமனங்களைப் பெற்றுக்கொண்டு கடமைக்குச் சமுகமளிக்குமாறு, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம் கேட்டுள்ளார். நியமனம் பெற்றோர் விபரம் வருமாறு-

அந்தோனி றெற்சலா, செல்வராஜா மைதிலி, கே.லோகநாயகம், வி.மகாலிங்கம், கே.அற்புதராணி, பி.காந்திமதி, கே.ரகுநாயகி, ஆர். கிருஸசுகி, எஸ்.மதிவதனி, கெ. கோமளசெல்வி, எஸ்.ஜெகதீஸ்வரி, ஜி.தேவமலர், எம்.சுகந்தினி, என். சசிகலா, வி.நவீனா, மனோகரன் யசோதரன், எஸ்.தவக்குமார், கே. சத்தியசீலன், ஏ.முரளிதரன், வி.தயாளசிவம், எஸ்.மதனரூபன், எம்.பாஸ்கரன், ரி.யோகநாதன், ரி.ஐங்கரன், ஏ.மனோகரன், என்.குகதாசன், எம். லொறாந்தஸ், ஜே.ஈ.கொலியன், எஸ்.சிறீதரன், ஜே.ஜெயக்குமார், எஸ்.சசிகுமார், எஸ்.தவராசா, பி.புஸ்பராஜா, கே.கதாதரன், ஏ.தேவமூர்த்தி, ஏ.எட்மன்கெனடி, பி.ஜயசங்கர், கே.யோகேஸ்வரன், ஏ.விஜிதராஜா, ஏ.குணதீபன் ஜே.கோமதி, ஆர்.தவச்செல்வி, ரி.கங்கேஸ்வரன்.



ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூகநிலைய அடைக்கலநாயகி முன்பள்ளி விளையாட்டுப் போட்டியின்போது, பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நிலையக் கொடியை ஏற்றுவதனையும், அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.பா. பவநிதன் நிற்பதையும் காணலாம்.

(படம் : பிரதேச செய்தியாளர்)

## மரக்கன்றுகள் விநியோகம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, போக்கறுப்பு கிராம அலுவலர் பிரிவில் பயன்தரு மரக்கன்றுகள் விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில், ஒரு குடும்பத்திற்கு 10 கன்றுகள் என்ற வீதம் மொத்தம் 50 குடும்பங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இதில் கமுகு, மலைவேம்பு, தேக்கு, சமண்டலை, மாதுளை போன்ற கன்றுகள் விவசாயத் திணைக்களத்தால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.


## சிறு விளம்பரம்

### தட்டச்சு வகுப்புகள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம் 31.12.2003 புதன்கிழமை

தொடர்பு : **N.S.T.C.A. 8/1** அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(570)



புத்தாண்டு மலிவு விற்பனை

தை 1 ஆம் திகதி வரை

சகல பொருட்களுக்கும் விசேட கழிவுடன்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ஓர் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்

லைட்ன் புடவை நிலையம்

(பஸ் நிலையம் எதிர்)

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P. : 222 2381

(சி-1956)



திறைஞ்சனல் சங்கானை

இன்று முதல் மாதவன், ஜோதிகா நடித்த

பிரியமான தோழி

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

KEOMA

(சி-1846)



ராஜா யாழ்ப்பாணம்.

சேரன், ரதி, மணிவண்ணன் நடித்த

சொல்லமறந்த கதை

(சிறந்த குடும்பச் சித்திரம்)

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-1847)


## அவுஸ்ரேலியாவிற்கெதிரான இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியா 2 விக்கெட்டிற்கு 27

மெல்பேனில் நடைபெறும், அவுஸ்ரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட்டின் இரண்டாவது இன்னிங்ஸில் - இந்திய அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 27 ஓட்டங்களை எடுத்துள்ளது.

முன்னதாக மூன்று விக்கெட்டுக்களை இழந்தநிலையில் 317 ஓட்டங்களுடன் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடங்கிய அவுஸ்திரேலிய அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 558 ஓட்டங்களை எடுத்தது. இதில் ரிக்கிபொன்டிங் மிகச்சிறப்பாக விளையாடி 257 ஓட்டங்களைப் பெற்றார். இந்த வருடத்தில் இவர் பெற்ற மூன்றாவது இரட்டைச்சதம் இதுவாகும். அத்துடன் இந்த வருடத்தில் இதுவரை 1472 ஓட்டங்களையும் எடுத்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணியில் மத்யு ஹேய்டன், ரிக்கிபொன்டிங் தவி மற்றய வீரர்கள் எவரும் துடுப்பா டத்தில் சோபிக்கவில்லை. அணி தலைவர் ஸ்ரீவோகூட 19 ஓட்ட களுடன் ஆட்டமிழந்தமையும் குறி பிடத்தக்கது.

அதன்பின்னர் ஆடத்தொடங்கி இந்திய அணி, ஆரம்பத்துடுப்பாட் வீரர்களை உடனேயே இழந்தது ஆகாஷ் சோப்ரா 4, வீரேந்த ஷேவாக் 11 ஓட்டங்களுடன் ஆட் மிழந்தனர். தற்போது ராவிட் 6, கா குலி 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழ காமல் உள்ளனர்

பந்துவீச்சில் அனில் கும்ளே அகர்கர் 3, டெண்டுல்கர் 1 விக் கெட்டை வீழ்த்தியுள்ளனர்.

இந்திய அணி 165 ஓட்ட களினால் அவுஸ்ரேலிய அணியை விட குறைவான நிலையில் உள் ளது.

## பட்லரின் அபார பந்து வீச்சால் பாகிஸ்தான் அணி சுருண்டது

பாகிஸ்தான், நியுஸிலாந்து அணிகளுக்கிடையில் வெலிங்டனில் நடைபெற்றுவரும் 2 ஆவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று, நியுஸிலாந்து அணி மூன்று விக்கட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக, இரண்டு விக்கெட் இழப்பிற்கு 52 ஓட்டங்களுடன் நேற்று ஆட்டத்தைத் தொடங்கிய பாகிஸ்தான் அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களை பெற்றுள்ளது. 12 ஓட்டங்களுக்குள் பாகிஸ்தான் அணியின், ஐந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டதே அந்த அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரிக்காமைக்குக் காரணமாகும்.

நியுஸிலாந்து அணி சார்பில் இயன் பட்லர் - 6 விக்கட்டுக்களை வீழ்த்தி, பாகிஸ்தான் அணியின் ஓட்ட எண்ணிக்கையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்.

அதன் பின்னர் ஆடத்தொடங்கிய நியுஸிலாந்து - மூன்று விக்கட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களை எடுத்துள்ளது. இதில் லூவின்சென், ஸ்ரீபன் பிளமிங், றிச்சட் ஜோன்ஸ் ஆகியோர் ஆட்டமிழந்த வீரர்களாவார். தற்போது நியுஸிலாந்து அணி பாகிஸ்தான் அணியை விட 245 ஓட்டங்களுடன் முன்னிலையிலுள்ளது.

### தேசிய இளைஞர் சேவைகள் மன்ற

## விருது வழங்கும் போட்டியில் பாஸ்கரன் குழுவுக்கு முதலிடம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால், இளைஞர் யுவதிகளின் திறமைகளைக் கௌரவித்து, 2003 ஆம் ஆண்டு இளைஞர் விருது வழங்கும் போட்டியில் - 'புதிய நிர்மாணிப்பு' நடனப் போட்டியில் பருத்தித்துறையைச் சேர்ந்த கே. பாஸ்கரன் குழுவினர் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி மகரகம தேசிய இளைஞர் நிலையத்தில், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தலைமையில் நடைபெறவுள்ளது.

விருது வழங்கும் விழாவில், இக்குழுவினரை - விருதும் சான்றிதழ்களும் பெற்றுக்கொள்ளுமாறு தேசிய சேவை மன்றப் பணிப்பாளர் சுனில் ஜெயவீர பணித்துள்ளார். (17)

## அரசாங்க அதிபரின் அறிவித்தல்

### தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கட்டப்பட்ட வீடுகளின் குடியிருப்பாளர்களுக்கான அறிவித்தல்

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டு, கையளிக்கப்பட்ட, கையளிக்கப்படாத வீடுகள் யாவும் 07.10.2003 ஆம் திகதியில் இருந்து, பிரதம மந்திரியின் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத் தீர்மானத்திற்கு இணங்க அரசாங்க அதிபருக்கு கையளிக்கப்பட்டுள்ளன. இவ் வீடுகளை இவ் அறிவித்தல் கிடைத்து மூன்று மாத காலங்களுக்குள் அதாவது 31.03.2004 இற்கு முன்னர் இவ் வீட்டிற்கு குடியிருக்க உரிமையளிக்கப்பட்டவர்கள் அதாவது, தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டவர்கள் - அவ் வீடுகளுக்குச் சென்று குடியேறும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இவ்வாறு குடியேறுவதற்கு அவ் வீடுகள் யுத்தத்தினால் அழிக்கப்பட்டு, சிதைவடைந்து குடியிருப்பதற்குத் தகுதியற்றதாக இருப்பது என மேலே கூறப்பட்டவர்கள் கருதினால் அது தொடர்பான விபரங்களை இக்கால இடைவெளிக்குள் வீடமைப்புத் திட்டம் அமைந்துள்ள இடம், அவ் வீடமைப்புத் திட்டத்தின் தன்மை, முழுப்பெயர், ஒதுக்கப்பட்ட வீட்டிலக்கம், குடியிருக்கமுடியாமைக்கான காரணம் என்பவற்றை விளக்கமாகக் குறிப்பிட்டு எனக்கு எழுத்து மூலம் அறிவிக்கவேண்டும். இவ்வாறு குடியிருக்கப்படாத, குடியிருக்காமைக்கான காரணத்தைத் தெரிவிக்கப்படாத வீடுகள் என்னால் முழுமையாகக் கையேற்கப்பட்டு குடியிருப்பதற்கு வீடுகள் அற்ற தகுதியான குடும்பங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

இவ் வீடுகளில் வீடமைப்பு அதிகாரசபையில் அல்லது எனது அனுமதியின்றி இவ் வீடுகளில் சட்டபூர்வமற்ற முறையில் வதிவார்கள் ஆயின் அவர்களை இவ் வீடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செ.பத்மநாதன்,**
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(சி-1991)

# மிலேனியம் சிற்றியைக் காட்டிக்கொடுத்த தேசத்துரோகி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க!

## அநுரா பண்டாரநாயக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

மிலேனியம் சிற்றியிலிருந்த 23 உளவுப்படையினரின் விபரங்களைப் புலிகளுக்குக் காட்டிக்கொடுத்த பிரதமர் ரணில், ஜோன் அமரதுங்க, முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா ஆகியோர் தேசத்துரோகிகள். இவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

காலி மாவட்ட ஊரகஸ்மன் ஹன்தியவில் இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வைபவத்தில் - தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் அநுரா பண்டாரநாயக்க கூறியதாவது -

மிலேனியம் சிட்டியிலிருந்த அரச படையின் உளவுப் பிரிவு உத்தியோகத்தர்கள் இருபத்து மூன்று பேரின் பெயர்ப்பட்டியலை விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்து உதவிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜோன் அமரதுங்க, முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா ஆகியோர் தேசத்துரோகிகளே. இவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்த தேசத்துரோகிகளின் நடவடிக்கையினால், இருபத்து மூன்று உளவுப்பிரிவு உத்தியோகத்தர்கள்- விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

இதனை தென்னிலங்கை மக்கள் மிகவும் தெட்டத்தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டுப்பற்றுள்ளவர். அவர் ஒருபோதும் விடுதலைப் புலிகளுக்கு எமது நாட்டை துண்டாட இடமளிக்கமாட்டார். அதேபோன்று, எனது சகோதரி சந்திரிகா எடுக்கும் தீர்மானங்கள் மிகவும் தூரசிந்தனைக்குட்பட்டவைகளாகும் என்பதை நான் அறிவேன்.

அவர் ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் மீட்டெடுத்த அமைச்சுக்களை மீண்டும் அவர்களுக்கு வழங்கவேமாட்டார்.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன - இந்த அரசியல் யாப்பினை நாடாளுமன்ற அங்கீகாரத்துக்கு சமர்ப்பித்த வேளையில், அன்று ரணில் விக்கிரமசிங்க அவரது இரு கரங்களையும் உயர்த்தி தனது ஆதரவை வழங்கினார்.

அந்த அரசியல் யாப்பினுள் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களே இன்று ஜனாதிபதியால் உபயோகிக்கப்படுகின்றது. ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரங்களைப் பாவிக்க முற்படவில்லையெனில், ஈழநாடாக எமது இலங்கை தேசம் முழுவதும் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கும் தற்போதைய இலங்கை நாட்டில் - நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்கள், வங்கிகள், ஒலிபரப்புச் சேவைகள் அரசியல் யாப்புக்கு முரணாக, தமிழ் ஈழத்துக்கு என்றும் வேறாக அமைந்துள்ளதை அவதானிக்கமுடிகின்றது.

நாட்டினதும், மக்களினதும் நல்ல நேரத்தால்தான் இந்த நாட்டில் ஜனாதிபதியான எமது சகோதரி சந்திரிகா பதவியில் இருக்கிறார்.

இல்லையென்றால், விடுதலைப் புலிகளின் கோட்டையொன்றாக முழுநாடும் மாறியிருக்கலாம்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வரும் என்பதில் சந்தேகம் இல்லை. ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படவேண்டும் என்ற நிலைப்பாடு இன்னும் எமக்குள் இருப்பதால், ஒருபோதும் மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஒன்றை உருவாக்க முடியாது என அநுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார்.

## மட்டு.படுகொலை சந்தேகநபர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த 19 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலைசெய்யப்பட்ட செங்கலடி - ஆண்டான்குளத்தைச் சேர்ந்த 17 வயதான மாணவியான சாந்தலிங்கம் நிசாந்தினி என்பவரது கொலை தொடர்பான சந்தேக நபர் - விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்தக்கொலையின் பின் தலைமறைவாகியிருந்த அன்ரனி என அழைக்கப்படும் கந்தையா யோகராசா என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவர், கடந்த 22 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது, தனது குற்றத்தினை ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# காவல்துறையால் மீட்கப்பட்ட 533 கிலோ கஞ்சா அழிப்பு

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் எல்லைக் கிராமங்களான வெருகல், கதிரவெளி, ஈச்சிலம்பற்றை ஆகிய பகுதிகளிலிலிருந்து தமிழீழ காவல்துறையினரால் கைப்பற்றப்பட்ட 533 கிலோ கஞ்சா அழிக்கப்பட்டது. கடந்த 3 மாதகாலமாக வெருகல் கதிரவெளி, ஈச்சிலம்பற்றை, வாகரை ஆகிய பகுதிகளில சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட 5 லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாவை காவல்துறையின் குற்றத் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றினர்.

இந்தக் கஞ்சா அனைத்தும் நேற்று முன்தினம் திருகோணமலை காவல் பணிமனையில் அழிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட தளபதிகளில் ஒருவரான கில்மன், காவல்துறைப் பொறுப்பாளர் திரவியநாதன், திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் காஞ்சனா உட்பட பொது மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# வேலைசெய்யும் சிங்களவர் இல்லை பிச்சைக்காரர்களாகவே உள்ளனர்!

## மல்வத்த மகாநாயக்கர் சீற்றம்

அரசியல்வாதிகள் சிலர் என்னைச் சந்திக்கவருவது, எனது ஆலோசனைகளை பெறுவதற்கு அல்ல, மக்களை ஏமாற்றுவதற்கே. இவ்வாறானவர்கள் என்னை சந்தித்துவிட்டு, வாசலைத் தாண்டியதும் எனது ஆலோசனைகளை மறந்து விடுவார்கள் எனக் கண்டி மல்வத்த பீடத்தின் மகாநாயக்கதேரர் ரம்புக்வெல ஸ்ரீ விபஸ்ஸி தெரிவித்தார்.

கண்டி பௌத்த சிங்கள சிரேஷ்ட பிரஜைகள் சங்க பிரதிநிதிகள், கண்டி ஒன்றிணைந்த பௌத்த பல மண்டல பிரதிநிதிகள் ஆகியோர் கண்டி மல்வத்தபீட மகாநாயக்கதேரரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டபோதே மகாநாயக்க தேரர் இவ்வாறு கூறினார்.

மகாநாயக்க தேரர் தொடர்ந்து கூறுகையில் - இன்றைய அரசியல் சட்டத்தை அவசியம் மாற்றியமைக்கவேண்டும் எனக் கூறுபவர்கள் பதவிகளில் பதுங்கியிருக்கின்றனர்.

சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபடுவார்களேயானால், இந்த அரசியல் சட்டத்தை மாற்றியமைக்கமுடியும். எனினும், அவர்களுக்கு எவ்வித அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை.

நமது நாடு ஒரு விவசாய நாடு. விவசாயத்துறை முற்றாகச் சீரழிந்துள்ளது. இந்த நாட்டில் வேலை செய்யக்கூடிய சிங்களவர்கள் இல்லை. எல்லோரும் வெளிநாட்டவர்களிடம் யாசகம் பெற்று பிச்சைக்காரர்களைப் போன்று - உண்டு குடித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

இன்றைய கல்வித்திட்டமானது - சிறுவர்கள் மத்தியில் தேசிய உணர்வை இல்லாமல் செய்துவருகின்றது. இந்த நாட்டில் பிக்குகளுக்கிருந்த கௌரவம் - இன்று காடையர்களுக்கே கிட்டிவருகின்றது. நம் நாட்டில் சிங்களவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கெதிராகக் குரல் கொடுப்பவர்களுக்கு, தான் பூரண ஆதரவு வழங்கப்போகிறேன் என மல்வத்த பீடத்திபதி மேலும் தெரிவித்தார்.

# அனைத்து மாகாணசபைகளையும் கலைத்து ஏப்ரலில் தேர்தலை எதிர்கொள்ளத் தயார்!

## சுதந்திரக்கட்சியினருக்கு பிரதமர் ரணில் பதில்



சிறிலங்கா சுதந்திரக்கட்சி விரும்பினால் அனைத்து மாகாண சபைகளையும் பெப்ரவரி மாதத்தில் கலைத்துவிட்டு, தமிழ் - சிங்கள புத்தாண்டிற்குப் பின்னர், ஏப்ரல் மாதப் பிற்பகுதியில் அனைத்து மாகாண சபை தேர்தல்களையும் நடத்துவதற்குத் தான் தயாராக இருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - சிறிலங்கா சுதந்திரக்கட்சியிடம் தெரிவித்தார்.

தென்மாகாணசபை தேர்தல் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள ஓகஸ்ட் மாதத்தில்தான், ஏனைய அனைத்து மாகாணசபை தேர்தல்களையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபை தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சியினர் - சுதந்திரக் கட்சியினரை எதிர்த்துப்போட்டியிடுவதற்கு முடியுமா? என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த நிமால் சிறிபால டி சில்வாவின் பிரசாரம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே, பிரதமர் இவ்வாறு கூறினார்.

அனைத்து மாகாணசபை தேர்தல்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம்வரை தள்ளிப்போடுவதற்கு விரும்பவில்லை. வெகுவிரைவில் தேர்தல் ஒன்றினை நடத்தி, ஐக்கிய தேசிய கட்சிக்கு இருக்கின்ற மக்கள் ஆதரவினை வெளிக்காட்ட நான் தயாராகவே இருக்கின்றேன்.

வடமேல் மாகாணசபையின் ஆட்சிக்காலம் ஜனவரி மாதம் முதல் வாரத்துடன் முடிவடைகின்றது. இந்த மாகாணசபை தேர்தலைக் குறித்த தினத்தில் நடத்துவதற்கான தேவை இருக்கின்றது. வடமேல் மாகாணசபை தேர்தலை நடத்துகின்ற அதேதினத்தில், ஏனைய மாகாணசபை தேர்தல்களையும் நடத்துவதற்கும், அதற்கு முகம் கொடுப்பதற்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எப்பொழுதும் தயாராகவே உள்ளது.

தென்மாகாணசபை, வடமத்திய மாகாணசபை, மத்திய மாகாண சபை மற்றும் சப்பிரகமுவ மாகாண சபை ஆகிய நான்கு மாகாண சபைகளினதும் ஆட்சிக்காலம் - 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் முடிவடைகிறது.

வடமேல் மாகாண தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியினர் கூடியளவான வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார்களாயின், தாம் வெற்றிபெறக்கூடிய தென்மாகாண சபையினையும் கலைத்துவிட்டு, வடமேல் மாகாணசபை தேர்தலுடன் ஒன்றாக நடத்தி இரு கட்சிக்கும் சமமான பலம் இருப்பதனை நிரூபிப்பதற்கு முடியும் எனச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினைச் சேர்ந்த சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதேபோன்றதொரு நிலைப்பாடு பொதுஜன ஐக்கிய முன்னணியினரிடம் இருக்குமானால், மத்திய மாகாணசபையினைக் கலைத்து, தேர்தல் ஒன்றினை நடத்துவதன்மூலம், ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் ஆதரவினை வெளிப்படுத்துவதற்குத் தயாராகவே இருக்கின்றோம் என்று, மாகாண சபையினைச் சேர்ந்த பெரும பாலான உறுப்பினர்கள் தங்களைத் தயார்படுத்திகொண்டு வருகின்றனர்.

இதேபோல, வடமேல் மாகாணத்தில் மக்கள் விடுதலை முன்னணியைத் தவிர, பிரதான இரு கட்சிகளையும் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் - பிரசார கூட்டங்கள் எதனையும் நடத்தாமல், இதுவரை காலத்திலும் தங்களால் செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற வேலைத்திட்டங்கள் குறித்த விபரங்களை மட்டும் மக்களுக்குத் தெளிவுபடுத்தி வருகின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணியை பொறுத்தவரை - முதலாவதாக நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றினை சந்திப்பதற்கு மட்டுமே தாங்கள் தயாராக இருப்பதாகப் பலமுறை வலியுறுத்தி வந்துள்ளனர்.

நாடாளுமன்ற தேர்தலுக்குக்பின்னர் மாகாணசபை தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால், சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் செய்துகொள்ள விருக்கின்ற கூட்டமைப்புக் குறித்து சிந்திக்க வேண்டிவரும் என்றும் மக்கள் விடுதலை முன்னணியினர் கூறிவருகின்றனர். இந்தநிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அனைத்து மாகாணசபை தேர்தல்களுக்கும் ஒரேநாளில் முகம் கொடுப்பதற்குத் தயாராகவே இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற மாகாணசபைத் தேர்தல்களை எதிர்கொள்ளுவதற்குத் தயாராகுங்கள்!

## தமது கட்சி உறுப்பினர்களுக்கு சந்திரிகா அறிவிப்பு



தமது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் - எந்தநேரத்திலும் தேர்தல்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்குமாறு ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் பாலபெத்தபெண்டி - சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இரு தேர்தல்களிலும் எவ்வாறு முகம்கொடுக்கவேண்டும் என்றும், தேர்தல் பிரசாரத்திற்கு எவ்வாறான குழுக்கள் அமைக்கப்படவேண்டும் என்றும் அவர் விரிவான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டே இந்த அறிவுரைகளை அவர் வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களில் பலர் முதலில் மாகாணசபைத் தேர்தலையும், பின்னர் பொதுத் தேர்தலையும் நடத்துமாறு கருத்துத் தெரிவித்தனர்.

எந்தநேரத்திலும் இரண்டு தேர்தல்களுக்கும் முகம்கொடுக்கக்கூடிய வகையில், தயாராக இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கவேண்டும் என ஜனாதிபதி தம்மிடம் கூறியதாக, பாலபெத்தபெண்டி கூறினார்.

மாகாணங்களில் இருக்கின்ற சிறிலங்கா சுதந்திர கட்சியின் செயலாளர்கள் தலைமையில், நாடளாவியரீதியிலுள்ள அனைத்து தேர்தல் தொகுதியிலும் இதற்கான குழுக்கள் அமைக்கப்படும்.

சில தேர்தல் தொகுதிக்ளில் - மாகாணசபை தேர்தலில் போட்டியிடுவதற்கு என்று சிறிலங்கா சுதந்திர கட்சி சார்பாக இவ்விரண்டு வேட்பாளர் வீதம் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயற்படும் சிறு கட்சிகளான லங்கா சம சமாஜகட்சி, லங்கா கம்யூனிஸ்ட்கட்சி, மஹாஜன கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன எந்தத்தேர்தல் குறித்தும் தங்களது நிலைப்பாடுகளை இதுவரையிலும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தககது.

# குன்றும் குழியுமாக உள்ள ஏ-9 வீதியால் போக்குவரத்துச் செய்வதில் சிரமம்!

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியின் மீசாலை சந்திப் பகுதியில், 300 மீற்றர் இடைவெளியில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளதால், இதனூடாக போக்குவரத்து செய்யும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

இந்த வீதி 5 சந்திகளை இணைப்பதாலும், ஏ-9 வீதியில் அமைந்து காணப்படுவதாலும் பெருமளவு வாகனங்கள், பாதசாரிகள் இந்த வீதியூடாக பிரயாணம் செய்கின்றனர். இந்த வீதி ஏற்கனவே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்தகால மழை காரணமாக மேலும் சேதமடைந்து காணப்படுகின்றது. குழிகளினுள் தண்ணீர் தேங்கிநிற்பதால், வாகனங்கள் அதனூடாகச் செல்லும்போது குழிகள் மிகவும் மோசமாகின்றன.

அதேவேளை - வீதியால் செல்லும் மக்கள் வெள்ளநீரில் தோய்ந்து போகவேண்டியுள்ளது. இந்த வீதியின் ஊடாகப் பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்களும் பெருமளவில் பிரயாணம் செய்வதால், சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அத்துடன், இந்தப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடிகளும் சிலவேளைகளில் ஏற்படுகின்றது.

இது தொடர்பாகப் பலமுறை கோரிக்கை விடப்பட்டபோதும், இந்த வீதி திருத்தப்படவில்லை. இதற்கான கற்கள் பறிக்கப்பட்டு பல மாதங்கள் சென்ற நிலையிலும், வீதி திருத்தப்படவில்லை. இந்தக் கற்கள் நாளாந்தம் சிதைவுற்று வருகிறது. எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்தப் பிரதான வீதியினைப் புனரமைக்க துரித அக்கறை காட்ட வேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (24)

## சத்துணவு விநியோகம்

(நவிண்டில்)

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி, மாமுனை, உடுத்துறை, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள தாய் - சேய் சிகிச்சை நிலையங்களுக்கு திரிபோஷா, கோனசோயா ஆகிய சத்துணவுகள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டது. (116)

## திருவெம்பாவை புத்தகம் அன்பளிப்பு

இந்து சமய மன்றங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் யாவற்றிற்கும் திருவெம்பாவையை முன்னிட்டு - திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சிப் புத்தகம் என்பவற்றை அன்பளிப்பாக மில்க்வைற் தொழிலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என, தொழிலதிபர் சிவநேயர் இ.தவகோபால் தெரிவித்துள்ளார். (44)

## அறக்கொடை நிதியிலிருந்து 75 ஆயிரம் ரூபா அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 79 ஆவது அகவையை முன்னிட்டு, வன்னி மாவட்டத்துக்கு அறக்கொடை நிதியிலிருந்து 75 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

வருடம் தோறும் வழங்கப்படும் நிதியானது - இம்முறை வன்னி மாவட்டத்தில் க.பொ.த உயர்தரம் கற்கும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் தலா 750 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்குத் தெல்லிப்பளை அன்ன பூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (72)

# ஒரேநேரத்தில் மூன்று ஒலிபரப்பு மக்கள் மத்தியில் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்றுமுன்தினம் மூன்று ஒலிபரப்புக்கள் ஒரேவேளையில் ஒலிபரப்பப்பட்டதனால், எதையுமே தெளிவாகக் கேட்கமுடியாது மக்கள் குழப்பமடைந்தனர். தினமும் நகரில் ஒலிபரப்புச் செய்துவரும் விளம்பர சேவையும், அதனைவிட தற்போது நடைபெற்றுவரும் எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம் தொடர்பான ஒலிபரப்புக்கள் இரண்டுமே ஒரே நேரத்தில் நேற்றுமுன்தினம் ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

வழமையைவிட விளம்பர சேவையினரும் தமது ஒலியை அதிகரித்து ஒலிபரப்புச் செய்ததையும் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. இதனால், புத்தாண்டுக்கு பொருட்களை கொள்வனவு செய்யவென நகருக்கு வந்திருந்த பொதுமக்களும், வியாபாரிகளும் பெரும் சிரமப்பட்டனர்.

எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு பிரசாரம் வாகனம் ஒன்றில் வைத்தும், நிலையான இடமொன்றில் வைத்தும் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. இதனால், அது தொடர்பான செய்திகளையும் தெளிவாகக் கேட்க முடியாதிருந்தது. இது தொடர்பாகப் பொது மக்கள் பலரும் தமது விசனத்தை தெரிவித்துள்ளனர்.

விளம்பர சேவையினர் நேற்று எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசாரத்திற்காகத் தமது விளம்பரத்தை இடைநிறுத்தியிருக்கலாம் என மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதும், இது தொடர்பாக விளம்பர சேவையினரைத் தொடர்பு கொண்டபோது- தற்போது பண்டிகைக் காலமாதலால் தம்மால் தமது விளம்பர சேவையை இடைநிறுத்தமுடியாது எனவும் தெரிவித்தனர். (ச)

# கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 12 விதவைகளுக்கு உதவிகள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள போக்கறுப்பு கிராம சேவகர் பிரிவில் - கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மூவிங் மொண்டோ நிறுவனத்தால் - விதவைகளுக்கு ஆடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில், இந்தப் பகுதியில் 12 விதவைகளுக்கு ஒரு குடும்பத்திற்கு 4 மறி ஆடும், ஒரு கிடாய் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பயனாளிகளுக்குப் பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி என்.வசீகரனால் நாளை கால்நடை சம்பந்தமான ஒரு பயிற்சி பட்டறை கோவில் அ.த.க. பாடசாலையில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகப் போக்கறுப்பு கிராம அலுவலர் த.பாலசுந்தரம் தெரிவித்தார். (17)

# 'விழுதுமாகி வேருமாகி' நூல் கிளிநொச்சியில் அறிமுகம்

கப்டன் வானதி வெளியீட்டகத்தினரால் 2 ஆம் லெப்ரினன்ட் மாலதி படையணியின் படைப்பான 'விழுதுமாகி வேருமாகி' என்ற நூலின் அறிமுகவிழா நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில், வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியர் கருணாகரன் தலைமையில் இந்த அறிமுகவிழா இடம்பெற்றது.

இதில் ரி.ரி.என். தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த சிவா சின்னக்கொடி பொதுச்சுடரினை ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியை மாலதி படையணித் தளபதி தமிழ்ச் செல்வி ஏற்றிவைத்தார். நூலின் முதற்பிரதியினை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவிழி வெளியிட்டு வைக்க, மாலதி படையணியில் இருந்து வீரச்சாவடைந்த மாவீரர் கப்டன் மனோவின் தாயார் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் - எழுத்தாளர்கள், போராளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# புனரமைக்கப்பட்ட தபால்நிலையம் ஜனவரி 14 ஆம் திகதி திறந்துவைப்பு

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் சாவகச்சேரி பிரதம தபால் நிலையக் கட்டடத்தின் பெரும்பகுதி அழிவடைந்து காணப்பட்டது. இக் கட்டடம் 40 இலட்சம் ரூபா செலவில தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதம தபால்நிலையம்- பல உபதபால்நிலையங்களைக் கொண்டிருந்தும், கட்டட வசதியின்மையால் கடந்த காலத்தில் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்துள்ளது. இதற்கான கட்டடப் பணிகள் முடிவடைந்து வருகின்றது. இந்தத் தபாலகம் தென்மராட்சியில் காணப்படும் உப தபால் நிலையங்களின் பிரதம தபாலகமாகும்.

இதனை ஜனவரி 14 இல், தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கவுள்ளார் எனப் பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (24)



இலங்கை மின்சாரசபை யாழ்.மாவட்ட பொறியியலாளராக 14 ஆண்டுகள் கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் எஸ்.வல்லிபுரத்துக்கு - இலங்கை மின்சாரசபை பருத்தித்துறை அலுவலகத்தால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில், மின்சாரசபை ஊழியர் எஸ்.ஆனந்தராசா அன்பளிப்பொன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம். (17)

# சின்னஞ்சிறு செய்திகள்

## சமுர்த்தி முகாமையாளர்கள் இடமாற்றம்

இதுவரை காலமும் யாழ்.மாவட்டச் செயலகத்தில் சமுர்த்தி முகாமையாளராகக் கடமையாற்றிய மா.சிவகுமாரன் - சமுர்த்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்துக்கான உள்ளகக் கணக்காய்வாளராக ஜனவரி முதலாம் திகதி முதல் நியமிக்கப்படவுள்ளார்.

இவருடன் எஸ்.அமரதாஸ் சமுர்த்தி அதிகாரசபை தலைமை அலுவலகத்தில் இருந்து உள்ளகக் கணக்காய்வாளராக யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(24)

## விபத்தில் இளைஞன் காயம்

மானிப்பாய் சந்தை வீதியில் மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது. இந்த இடத்தைச் சேர்ந்த அரசலிங்கம் சுஜிதரன் என்பவரே காயமடைந்தார். ஒழுங்கையில் இருந்து வீதியில் ஏறமுற்பட்ட போது, வீதியால் மிகவேகமாக மூன்று பேரை ஏற்றிவந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த இளைஞர் காயமடைந்தார். (46)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

திருப்புகழ் - புகழ்பெற்ற பொலிகண்டி கந்தசாமி ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப 6 மணிமுதல் பி.ப 6 மணிவரை திருவாசகம் முற்றோதல் - மு.மருதபிரான் தலைமையில் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## காங்கிரஸ் கட்சியின் பொதுக்கூட்டம்

அகில இலங்கை தமிழ்ஃ காங்கிரஸ் கட்சியின் வருடாந்த பொதுக கூட்டம் - எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தலைமைச் செயலகமான காங்கிரஸ் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் தீர்மானங்களை, எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பொதுச்செயலாளர் தி.மகேந்திரராசா கேட்டுள்ளார். (122)

## பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாசாலைக்கு - யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்- பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உருக்கு அலுமாரிகள் மூன்றும், உருக்கு கபினற் ஒன்றும், புத்தக றாக்கை ஒன்றும், அலுவலக மேசையொன்றும் கொள்வனவுக்காக நிதியுதவி அளித்திருப்பதாக பாடசாலை அதிபர் செ.சிவஞானம் தெரிவித்தார். (24)

## சமுர்த்தி வங்கிக்கு கட்டடம்

மருதங்கேணிப் பிரதேசத்தில் சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கான நிரந்தரக் கட்டடம் - மருதங்கேணியில் அமைக்கப்பட்டுவருகின்றது.

10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் இந்தக் கட்டடம், விரைவில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இந்தச் சங்கம், தனியார் வீடு ஒன்றிலேயே இயங்கிவருகின்றது. (122)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ஜெ.விபுசனா
முகவரி : 'உதய வீடு' மீசாலை வடக்கு.

மூன்றாவது அகவையில்



பெயர் : தி.அலைமகள்
முகவரி : கொற்றாவத்தை வல்வெட்டித்துறை.

மூன்றாவது அகவையில்



பெயர் : ஜெ.ஜெஷந்தா
முகவரி : சுவிஸ்.

ஐந்தாவது அகவையில்



பெயர் : தே.கஜீனா
முகவரி : வளலாய், அச்சுவேலி.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : பி.யூட்கபில்ரன்
முகவரி : நல்லாயன் வீதி, இளவாலை.

பதினொராவது அகவையில்



பெயர் : க.மாறன்
முகவரி : 10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------
------------------------------
முகவரி :--------------------
------------------------------
பிறந்த ஆண்டு:----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------
பெற்றோர் ஒப்பம்



# நூல் அகம்



## யாழ்ப்பாணத்து மண்வாசனை

யாழ்ப்பாணத்து மண்வாசனை என்ற பெயரில் நூல் ஒன்று வெளியாகியுள்ளது. வண்ணை தெய்வம் என்பவர் இந்த நுலை எழுதியுள்ளார்.

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து வேறு நாடுகளுக்கும் சென்று வாழ்ந்துகொண்டிருக்கும் இலங்கை நாட்டவர், தம்முடைய நாட்டின் பெருமையை மறக்கவில்லை என்பதைக் காட்டுகின்ற வகையிலே இந்த நூல் வெளிவந்துள்ளது.

ஈழத்து தமிழ் இலக்கியத்தில் புலம்பெயர்ந்த இலக்கியங்கள் என்ற வரிசையில் இடம்பெறுகின்ற நூலாகவும் இது விளங்குகின்றது.

யாழ்ப்பாணத்தில் வாழந்த ஒருவர் - யாழ்ப்பாணத்து மண்வாசனையை - புலம்பெயர்ந்து, தான் வாழும் நாடுகளிலும் முகர்ந்துகொண்டு இருக்கின்றான். யாழ்ப்பாணத்தை விட்டு தான சென்றபோதும், அந்த மண்ணின் வாசனையை விட்டு விட்டு, செல்லவில்லை, என்பதை இந்த நூல் எடுத்துக் காட்டுகின்றது.

இந்த நூலின் கட்டுரைகளும், கட்டுரை எழுதியவர்கள் பற்றிய குறிப்புகளும், கவிதைகளும், வரலாறுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. எழுத்துக்களாக கூறிக்கொண்டு வந்த யாழ்ப்பாணத்து மண்வாசனை, இறுதிப் பக்கங்களில் ஓவியங்களாகவும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து, தமது பெருமைகளை விட்டுச்சென்ற 'தோன்றிற் புகழோடு தோற்றுக' என்ற வரிசையில் வாழ்ந்துசென்ற அறிஞர்களின் சிலரைப் பற்றிய கட்டுரைகள் இந்த நூலின் ஆரம்பத்திலேயே காணக்கூடியதாகவுள்ளது.

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை, தனிநாயகம் அடிகள். க்வியரசு சொர்ணலிங்கம் முதலிய அறிஞர்கள் தொடர்பான கட்டுரைகளை இந்த நூலில் காணமுடிகின்றது. ஜி.ஜி.பொன்னம்பலம், செல்வநாயகம், கம்யூனிஸ்ட் கார்த்திகேசு, மதுரகவி இளவாலை அமுது ஆகியோரைப் பற்றிய சிறு குறிப்புகளும், அவர்களின் புனை பெயரும் புகைப்படங்களோடு கொடுக்கப்பட்டுள்ளன.

மண்வாசனை என்னும் கட்டுரை ஒன்று இடம்பெறுகின்றது. இந்தக் கட்டுரையில் வண்ணார் பண்ணையை உள்ளடக்கிய பிரதேசங்களின் ஊர்ப்பெயர்களையும், அமைவிடங்களையும் வார்த்தைகளால் சொல்லப்படுகின்றது.

'யாழ்ப்பாணத்து திருவிழாக்களில்' என்ற பெயரில் ஒரு கட்டுரை யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படுகின்ற, ஆலயத் திருவிழாக்கள், சமயத்திருவிழாக்கள் தொடர்பான சுருக்க விபரங்களும் இந்த நூலில் காணப்படுகின்றன.

'புனிதம் நிறைந்த யாழ். நகரில் நல்லூர் மண்' என்ற பொருளில் நல்லைக் கந்தன் ஆலயத்தில் இடம்பெறும் பூசைகள், விழாக்கள் தொடர்பான விடயங்களைக் குறிப்பிடுகின்ற கட்டுரையைக் காணமுடிகின்றது.

இளவாலை, இணுவில், அல்வாயூர், வேலணை, கீரிமலை, யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் போன்ற ஊர்களின் சிறப்பை விளக்கும் தனித்தனிக் கட்டுரைகளும் இடம் பெறுகின்றன.

பிரான்ஸ், ஜேர்மன் ஆகிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிலரின் கவிதைகள் இந்த நூலின் இடம்பெறுகின்றன. புலம்பெயர் நாடுகளில் இருந்துகொண்டு, தமது கவிதைமூலமாக யாழ்ப்பாணத்தை அந்தக் கவிஞர்கள் சித்தரித்த உண்மையைக் காணக்கூடியதாகவுள்ளது.

மண்வாசனையை விளக்குகின்ற வகையில், யாழ்ப்பாணத்து ஊர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, 'மண்ணின் பெயர் வரலாறு' என்ற வகையில் ஊர்ப்பெயர்கள் அவற்றின் வரலாறு இறுதியில் கூறப்பட்டுள்ளது. இதைப் பின்னிணைப்பாக ஆசிரியர் கொடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்து மண்வாசனையை வார்த்தைகளில் விபரிக்கமுடியாத பல விடயங்களை கூறவேண்டும் என்கின்ற ஆவல் வண்ணை தெய்வத்திற்கு ஏற்பட்டிருக்கின்றதுபோல தெரிகின்றது. ஏனெனில், இந்த நூலில் இடம்பெறுகின்ற பின்னிணைப்புக்களில் யாழ்ப்பாணத்தின் மறக்கமுடியாத பல விடயங்கள் குறிக்கப்படுகின்றன. அவை புகைப்படங்களாக இணைக்கப்படுகின்றன. இந்தப் புகைப்படங்களில் உள்ள விடயங்களைத் தனித்தனியே நூலாக எழுதமுடியும. அந்த அளவிற்கு அந்தப் புகைப்படங்கள் யாழ்ப்பாணத்து மண்ணின் வாசனையை விளக்குகின்றன.

தொகுத்துக் கூறுவதாக இருந்தால், யாழ்ப்பாணத்து மண்வாசனைய விட்டு, வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழருக்கு, யாழ்ப்பாணத்து மண் வாசனையை மீட்டுப் பார்க்கும் ஒரு நூலாக இந்நூல் அமைந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

**பூ.நகுலன்**

## நானும், நீயும், வட்டங்களும்...!



நான்
நீ – என்னை
உன் பாடுபொருளாக்கினாய்
அதையும் மீறி
ஒரு குருடனின் கறுப்புக்கண்ணாடி யென
எனை அணிந்து
பிச்சையுறுகிறாய்
நாற்காலிகளினிடையில் – நீ
எழுந்தெத்தனிக்கும்
என்தலை வீதி – அவற்றின்
கால்களினிடையில்
ஒரு வட்டமாயிருக்கலாம்
எனது துயரம்
எனது கோபம் – உன்
வட்டங்கள் பற்றியதே – நீ
பரப்புகளை வரையறுக்கிறாய்
வட்டத்தின்...
வட்டங்களற்ற
அழகான புதினமே
எனது மகிழ்ச்சி – நான்
ஆகுதியர்களின் மீது
ஆணையிடுகிறேன்
நீ – பிறப்பிக்கும்
ஒவ்வொரு துயரங்களினாலும்
எனக்குள் பசித்துக் கொண்டிருக்கிறது
ஜுவாலை... அதனது
தாகம், பசி – நீட்டும்
நாவுகளை உன்
வட்டத்தின் வெளி.

**த.அகிலன்**

## கனவுகளுடன் மட்டுமே



என்றும் கரையோர மணலாக
வாழ்ந்துவிட்டுப் போகவே
அவள்
வடிவமைக்கப்பட்டுள்ளாள்!
எல்லா அலைகளுமே
அவளை
அடித்துச் செல்லவே
அனுப்பப்படுகின்றன!
அவளின் வரண்ட வாழ்வில்
வந்து மறைவதெல்லாம்
வெறும் கானல் தான்!
சபிக்கப்பட்ட ஒரு
சத்திரமாகவே
அவள் வாழவேண்டியதாயிற்று!
எச்சமிடவேனும் - ஒரு
காக்கை குருவி கூட
அந்த நல்குரவின் சத்திரத்துக்கு
வரவேயில்லை...!
வசைபாட மட்டுமே
வடிவமைக்கப்பட்ட
அந்த ஏழையின் வாழ்வில்
இசைபாட ஒரு
இளநெஞ்சைத்தேடும்
கனவுகளுடன் மட்டுமே
கழிகின்றது வாழ்க்கை!

**எஸ்.நந்தினி**

## பறந்திட வேண்டும் ஓர் வெண்புறா



கார்மேகம் பருவத்தால்
கலைந்திடும் என்றாலும்
போர்மேகம் எப்போது
போகும் என்றிருந்தோம்

போர் மேகம் ஓய்ந்து
போய் எம் நாட்டில்
ஓர் ஆண்டு மேலாக
ஓடி மறைந்ததுவே

கூர்வாள் கொண்டு நிதம்
கொடியவதை நடக்கவில்லை
வேர் அறுந்த மரம் போல
வீதியிலே கிடக்கவில்லை.

போர் விமானம் வந்திங்கே
போடும் குண்டுச் சத்தமில்லை
நார் போல கிழிந்து உடல்
நாற்றிசையும் சிதறவில்லை

ஓர் ஆண்டுக்கு மேல் நிம்மதியாய்
ஓடி விட்டது காண்
பார் முழுதும் பார்திருக்க
பல பேச்சு நடக்குது காண்

ஊர்விட்டு ஊர்மாறி
ஓடிய மக்களெல்லாம்
சீர்கெட்ட நிலைமாறி
சொந்த இடம் திரும்புகின்றனர்.

ஓர் வீட்டில் தானும்
அழுகை ஒலி கேட்கவில்லை
யார் வீட்டில் என்றாலும்
மகிழ்ச்சிக்கு குறைவில்லை.

போர் போட்ட தடைகளெல்லாம்
போன மகிழ்ச்சியினால்-மக்கள்
வார் ஓட்டம் நடத்துகின்றார்
வடக்கேயும் தெற்கேயும்.

தார் போட்ட வீதியெல்லாம்-மழைத்
தண்ணி கொண்டு போனாலும்
கார் ஓடித்திரிந்த மக்கள்
களிப்புடனே வாழ்கின்றார்.

ஊர்மிளாவும் மெனிக்கேயும்
ஒன்றாகத் திரிகின்றார்
பார் அங்கே பஜீர் காக்காவும்
பக்குவமாய் வருகின்றார்.

யார் இதைத் தடுத்திட்டார்
நாமறிய வேண்டாமோ
சீர்தரும் சமாதானம் என்பதனை
சிந்தையிலே கொள்வோமா

ஊர்மீட்டு எமக்காக
உரிமை பெற்றுத்தந்திடவே
போர்க் கோலம் கொண்டிங்கே
போய் மடிந்தோர் பலருண்டு.

யார் மறந்து போனாலும்
நாம் மறந்து போவோமா
பார்போற்றும் வீரத்தின்
பலனாய் வந்திட்ட சமாதானம்.

ஓர் ஆண்டு மட்டும் இங்கே
இருந்திட்டால் காணுமோ
வேர்விட்டு சமாதானம் விருட்சமாய
வளர்ந்திட வேண்டாமோ.

பார் முழுதும் பார்த்து மகிழ்ந்திடவே
பறந்திட வேண்டும்
ஓர் வெண்புறா எம்நாட்டில்
ஒலிவ் மரக்கிளையோடு.

**பா.சயந்தினி**

# சொல்லாத செய்தி

இவ்வார சிறுகதை

கோ.கோகுலறதன்

'ரமேசண்ணை எங்கை போறியள்', 'எடேய், எங்கடை தனேசே? நான் மந்திகை ஆஸ்பத்திரிக்குப் போறன். என்ன விசேஷம் எண்டு பார்க்க. அது இருக்கட்டும் ஊரில என்ன விசேசமடா தம்பி'

'அண்ணை நீங்கள் கேள்விப்படேல்லையே!'. 'இல்லையடா தம்பி இல்லை. என்ன சொல்லு? என்ன விஷேசம். நான் இண்டைக்கு யாழ்ப்பாணத்தில எந்தப் புதினமும் கேள்விப்படேல்லையே'

இளைய எழுத்தாளன், புதிய பத்திரிகையாளன், செய்தி எழுதவேண்டும். என் செய்தி எப்பொழுது பத்திரிகையில் வரும் என எண்ணிச் செய்தி அனுப்பும் செய்தியாளர்களில் இவனும் விதிவிலக்கல்ல. ஞானசூரியன் என்றும் மறைக்கப்படக்கூடாது. அதை முகில்கள்தான் மூடிடினும், அதை ஏற்றுக்கொள்ளமுடியாது. அதையும் விலக்குவேன் என வீர எழுச்சியும், விடுதலை எண்ணமும், சுதந்திரவேட்கையும், ஆதிக்கம் செலுத்துவோரை வேரோடு அறுக்கவேண்டும், மூடப்படும் உண்மைகள் முகிழ்விட்டு எழவேண்டும் என்ற இலட்சியமும் கொண்ட எழுத்தாளர்களில் இவனும் ஒருவன்.



இளையவன்தான் எனினும், துடிப்புக்கள் இவனிடம்தான் அதிகம்.

'என்ன சொல்லுறியள் ரமேசண்ணை. இண்டைக்கு அதுவும் இப்பத்தான் அறிஞ்சனான். ஆனை விழுந்தான் சுடலையிக்கை அநாதரவா ஒரு பெண்ணின் சடலம் கிடக்காம்'

'ஆ... இப்பிடியே தனேஸ். நான் எதுக்கும் ஆனைவிழுந்தான் போய்ப் பார்த்திட்டு வாறன். அப்ப பேந்து சந்திப்பம்'.

நல்ல நியூஸ். என்ன நடந்ததோ தெரியாது. விடக்கூடாது. எது எண்டாலும், உண்மையைக் கண்டு பிடிச்சு, கொலைக்குக் காரணத்தை அம்பலப்படுத்தவேணும். ஆனைவிழுந்தானுக்குப் பக்கத்திலதானே ஆமிக்காம்பும் கிடக்கு. ஆரோ எந்தப் பாவியோ. என்ன நடந்ததோ தெரியல்லைப் பார்ப்பம். இது அந்தப் பத்திரிகையாளனின் மனக்குமுறல்.

வீதியின் இருமருங்கும் காடு எனினும், ரமேசின் பல்சர் மட்டும் அதனையும் கடந்தபடி வந்துகொண்டிருந்தது. அதன் கீழுள்ள கரும்புல்லை மேயச்சென்ற பசுக்கள் - அந்த வீதியை மூடியபடி நடந்தன. மனதின் வேகம், செய்தியை அறிய வேண்டுமென்ற வேட்கையின் வேகம், உண்மையை உலகறியச் செய்யவேண்டும் என்பதால் உண்டான வேகம். இவற்றை எல்லாம் கடந்த வேகத்தில் பசுக்கள் வீதியைக் கடந்தன. வீதியை மூடிப்பாயும் பசுக்களுக்காய்க் காத்திருக்கும் ரமேஸ் - கூட்டம் கூட்டமாய்த் திரும்பும் பசுக்களையும், பறவைகளையும், மேகக் கூட்டங்களையும் கண்டான். ஆனால், அவனால் அதை நம்பமுடியவில்லை.

எமது மண்ணில் ஆறறிவு இல்லாத, குறைந்த அறிவு படைத்த எல்லா ஜீவராசிகளுமே வீடுதிரும்புகின்றன. ஆனால், ஆறறிவு படைத்த ஆதிக்குடியான மனிதன் மட்டும் - மனிதரிலும் தமிழன் மட்டும் தன் கடமை முடித்து வீடு திரும்புவது என்பது உண்மையல்ல என எண்ணியவனின் பல்சா் - அடர்ந்த காட்டின் மத்தியில், நிசப்தமே குடிகொண்டிருந்த அந்த இடத்தில், ஆனை அன்று ஒருநாள் விழுந்த இடமான சுடலையில் நிறுத்தப்பட்டது.

காலடி எடுத்துச் சுடலைக்குள் வைக்கும்போது, 'மேமல்லி போகேலாது' இது தமிழ் சரியாகத் தெரியாத பொலிசுக்காரரின் கட்டளை. தலையை நிமிர்த்திப் பார்க்கிறான். காவோலைகள் குவிக்கப்பட்ட இடத்தைச் சுற்றிக் கிராமசேவகர், பொலிஸார் எனப் பலர் நின்றுகொண்டிருக்கின்றனர். எனினும், சடலம் மட்டும் தெரியவில்லை. அது காவோலைகளால் மூடப்பட்டிருக்கிறதுபோலத் தெரிந்தது. இனி நின்று பிரயோசனமில்லைதான். ஆரெண்டு சொல்லுவம். சொன்னால் சிலவேளை விடுவான் இவன் என எண்ணியவன், 'சேர் மீடியா'... 'மீடியா அப்ப போங்கோ' இது மறித்த பொலிஸாரின் மறுகட்டளை.

காலடி எடுத்து வைக்கும் ரமேசின் இதயம் கருகித் துடிக்கிறது. படுகொலை செய்யப்பட்ட மனிதன் காவோலைகளால் முடக்கி மூடப்பட்டுக் கிடக்கிறான். அவனால் அந்தக் காட்சியைப் பொறுக்கமுடியவில்லை. எனினும், மனதைச் சமாதானப்படுத்தியவன், விடயமறிய வேண்டி அருகே நின்ற கிராமசேவகரிடம் சென்றான்.

'என்ன சேர் பிரச்சினை' 'தம்பி.. நீங்களே. உங்களைத்தான் காணேல்லை எண்டு யோசிச்சனான். என்ன நடந்தது எண்டு தெரியேல்லைத் தம்பி. இதுக்கை ஒரு பெண்ணின்ர சடலம் கிடக்காம்'. 'ஆர் .. ஆள்.. சேர் இஞ்சத்தை ஆளோ? வேறை இடமோ?' 'அது தெரியாது தம்பி'. 'பேர்.. வயது, ஏதும் தெரியுமோ'. 'என்ன தம்பி இன்னும் காவோலைய திறந்து பாக்கேல்லை. நீதவான் வருவாராம். பொலிசு சொல்லுது'.

'அதுக்கென்ன' அவர் வரட்டும். நாங்கள் காவோலையைத் திறந்து பாப்பம்'. 'அது சரி தம்பி ஆர் திறக்கிறது'.

'இஞ்சை விடுங்கோ சேர்... என்ன இது முகம்... எல்லாம் வீங்கிப் போச்சு. அடையாளமே காணமுடியேல்லை. கடிகாயங்கள் எல்லாம் நிறையக் கிடக்கு'.

'ஓம் தம்பி, கடிகாயங்கள் கிடக்கிறதாலதான் ஆரெண்டு இனம்காண முடியவில்லை'.

'என்ன அநியாயம் சேர். உடம்பில உடுப்பு... உடுப்பை உடம்புக்கு மேலை போட்டு கயித்தால கட்டியிருக்கிறாங்கள் பாத்தியளே. என்ன அநியாயமான உலகம் சேர் இது. இப்பிடியும் மனிதரில மிருகங்களும் இருக்குதுதானே'.

'தம்பி இது மற்றதுபோல'.

'ஓம் சேர். இதைச் செய்தது எங்கடை காவல்காரர்போலதான் கிடக்கு'.

'தம்பி மெதுவாகக் கதை, மெதுவாகக்கதை. இதில நிக்கிற தில ஒண்டு, இரண்டுக்கு சில வேளை விளங்கும்'.

'அது இருக்கட்டும் சேர். ஏதாவது தடயம் கிடைச்சாத்தானே சம்பவத்தை வெளி உலகுக்குக் காட்டமுடியும்'.

'தம்பி சரியாச் சொன்னாய். அந்த மூலைச் சுவரோடை ஏதோ கறுப்பாய் பேஸ்போல கிடக்குது'.

'சேர் ஓடிவாங்கோ சேர்'. 'என்ன தம்பி என்ன என்ன?'.

'இது என்ர பேர் எண்டு இந்த ஐடன்ரிக்காட்டைப் பாருங்கோ சேர். எனக்கு... ஏதோ... செய்யுது'.

'...எப்பிடித் தம்பி இது சொல்லுவன் வாயால. எட தம்பி இது... இது உன்ரை... உன்ரை... மாமாவின்ரை மகள் தர்சிபோல இருக்குது. முழுப் பெயா் நவரட்ணம் தர்சியேதான்'.

'ஐயோ தர்சி... தர்சி... எடியே உனக்கு என்ன நடந்ததடி தர்சி?... ஐயோ என்ரை தர்சி ஐயோ...'

ஐயோ என்றவன் வாய் மௌனியாகிவிட்டது. தம்பி ரமேஸ் எனப் பல தடவை கூப்பிட்டும், பதில் எதுவுமே வரவில்லை. செய்தி சேகரிக்க வந்த செய்தியாளன் - செய்தியாகிப் போய்விட்டான். காவோலையைத் தூக்கியவன் கணப்பொழுதில் பேச்சு மூச்சற்றுப் பிணமாய்க் கிடக்கிறான்.

'எடை தம்பி ரமேஸ் ரமேஸ் என்னப்பு...'

'அம்மா என்னை ஏன் இஞ்சை கொண்டுவந்தனீங்கள்'.

'என்னப்பு செய்யிறது. வருத்தம் வந்தால் ஆஸ்பத்திரிக்குத்தானே கொண்டுவர வேணும்'. 'ஏன் இஞ்சை... என்னை...' என்றவன் தேம்பித்தேம்பி அழத்தொடங்கினான்.

'தம்பி இப்பதானப்பு உனக்கு அறிவு வந்திருக்கு. பொறு எல்லாம் சொல்லுறன்'. 'அம்மா... என்ரை தர்சி... தர்சி... எங்கே? என்ரை தர்சி எங்கே...' என்றவன் மீண்டும் மயக்கமடைந்து, கட்டிலில் வீழ்ந்து படுத்துவிட்டான். உயர்ந்த இலட்சியங்களோடு, உயர்ந்த மனிதனாக வாழ நினைத்தவன் - அதனாலேயே வருந்தத் தொடங்கிவிட்டான்.

'என்ன ரமேஸ் உனக்கு என்ன செய்யுது?, சொல்லடா' மயங்கிப்போன மகனோடு தாயின் வாதாட்டமது. இதனால் ஈர்க்கப்பட்ட வைத்திய கலாநிதி - 'ஏனம்மா என்ன நடந்தது'. 'எழும்பிக் கதைச்சவன் மீண்டும் மூர்ச்சசுந்துகிடந்து புசத்துறானய்யா'. 'இது பிரச்சினை இல்லையைம்மா. மயக்கம் முற்றாத் தெளியேல்ல. இது தான் இப்பிடி மூளையில் படிஞ்ச விடயங்கள் கதையாய் வருகுது'.

'உன்னோடை நேராய்க் கதைச்சதென்டுது என் வாழ்வில் கிடையாது. ஆனா... நீ என்னோட நேராய்க் கதைச்சதும் இல்லை. அப்பிடி இருக்க நீ... என்னை இதயத்தில் மட்டுமல்ல, பேச்சிலும் வைச்சிருக்கிறாய். நான் உன்னைப்போல காதலை வெளிப்படுத்த இதுவரை எதையுமே செய்யவில்லை. ஆனால், நீ என்னை உன் பேஸ்ஸில் வைக்குமளவிற்கு மட்டுமல்ல... அன்று பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டிமன்றத்தில் எதிரணித் தலைவியான நீ... என் அணித் தலைமை வெல்லவதற்காய் சோறா? சுதந்திரமா? என்றபோது, சுதந்திரத்திற்காய் விட்டுத் தந்ததை நானறிவேனடி. உன்காதல் புனிதமானது, நனிமானது, நாகரிகமானது, மரபு கடவாதது. என்றும் என் மணவாழ்வில் மணமகளாய் உன்னையே காணுவேன் என்றவன், நான் இன்று...'

'தர்சி நீ... நீ... எங்கே... நான்'

'அம்மா...' என்ன தம்பி ரமேஸ் நீ ஒண்டுக்கும் யோசிக்காதையடா.' அம்மா... எனக்கு இனி யோசினையே இல்லை. இனி நீங்கள் யோசிக்காவிட்டால் சரி'.

இந்த நாட்டில் எழுதுகோல் பாடம் புகட்டாது. ஏனென்றால், அது ஜனநாயக சூழலில் மனிதர்கள் மத்தியிலே தான் செல்லுபடியாகும். எனவே, இந்த நாட்டில் வாழும் மிருகங்களுக்கும் புத்திபுகட்டவேண்டுமானால், எழுதுகோலுக்கு அப்பால் எமனை வரவழைக்கும் கோலினையும் ஏந்தவேண்டும். இதுவே காலத்தின் கட்டளை.

'தர்சி... தர்சி... உன்னைத் தொட்டவனை சீ... உன்னைச் சீர்குலைத்த மிருகத்தை வேட்டையாட நான் அண்ணனிடம் எமனை வரவழைக்கும் கோலினையும் வேண்டப்போகிறேன்'. என்றவன் - கட்டிலால் குதித்து நடைபோடத் தொடங்கினான். எனினும், அவனை இழுத்தது - அவனில் இணைக்கப்பட்டிருந்த சேலைன் இரண்டும். அவற்றைக் கழற்றிவிட்டவன்- அண்ணனைத்தேடி அடியெடுத்து வைத்தான்.

# பல்கலை வித்தகர் காரை செ.சுந்தரம்பிள்ளை

ஈழத்தில் வாழ்ந்துவரும் கலைஞர்களின் பெயர் குறிப்பிட்டுக் கூறும் அளவிற்கு இருப்பவர் காரை சே.சுந்தரம்பிள்ளை. இவர் ஒரு ஆசிரியர். அத்தோடு பல்கலைக்கழக விரிவுரையாளர்.

யாழ்ப்பாண ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபராகவும் இவர் திகழ்கின்றார்.

சுந்தரம்பிள்ளையின் கலைப்பணிகளும், விருதுகளும் ஏராளமானவை. ஒரு கவிஞராய், நடிகராய், பேச்சாளராய், ஆய்வாளராய் கட்டுரை ஆசிரியராய் இவர்மூலம் பரிணமிக்கும் கலைகள் ஏராளம். இவர் முதன்முதலில் ஆடிய நாட்டுக்கூத்து 'இரணிய சங்ஹாரம்'. இதில் இவர் ஏற்றுநடித்த பாத்திரம் - பிரகலாதன். முதன்முதலில் நடித்த சமூக நாடகம் பராசக்தி. பாத்திரம் - கல்யாணி. இவ்வாறு தொடர்ந்தது இவரின் நாடகப் பணி.

இவரின் கவிதை நூல்களாக தேனாறு - 1963 ஆம் ஆண்டிலும், சங்கிலியம் - 1970 ஆம் ஆண்டிலும், தவம் - 1971 ஆம் ஆண்டிலும், உறவும் துறவும் 1985 ஆம் ஆண்டிலும், பாதைமாறியபோது - 1986 ஆம் ஆண்டிலும், காவேரி- 1993 ஆம் ஆண்டிலும் வெளிவந்தன.

இவரின் கவிதைகளில் முதன்முதலில் பிரசுரமான கவிதை, புகைவண்டி என்ற தலைப்பில் அமைந்த கவிதை. இதனை, பூஞ்சோலை என்ற பத்திரிகை பிரசுரித்தது.

இவர் எழுதிய ஆய்வுநூல்களாக, ஈழத்து இசை நாடக வரலாறு - 1990 ஆம் ஆண்டும், இந்து நாகரிகக் கலை - 1994 ஆம் ஆண்டும், நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் - 1996 ஆம் ஆண்டும், சிங்களப் பாரம்பரிய அரங்கம்- 1997 ஆம் ஆண்டும் வெளிவந்தவையாகும்.

இவற்றோடு இவர் பதிப்பித்த நூல்களாக நாடக தீபம் - 1983 ஆம் ஆண்டு வெளிவந்தது. அதேபோல் 1975 ஆம் ஆண்டு கல்வி உளவியல் என்ற நூலும் வெளியாகியது.

இவரது நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக்கொண்டவையாகும். அதேவேளை - வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றுக் கொண்டனர்.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் தங்கப் பதக்கத்தை முதற் பரிசாகப் பெற்ற இவரது ஆக்கங்கள் பின்வருமாறு-

பதுளை பாரதி கல்லூரி நடத்திய கவிதைப்போட்டி - 1968, யாழ். மாநகரசபை நடத்தி போட்டி 1969, அகில இலங்கை தமிழரசுக் கட்சி நடத்திய போட்டி - 1969, யாழ். மாநகரசபைக்குரிய (பரிசும் விருதுகளும்) மன்றக்கீதை - 1982.



காரை சே.சுந்தரம்பிள்ளையின் கலாநிதிப் பட்டத்திற்குரிய ஆய்வேடு (1990 ஆம் ஆண்டு), மிகச் சிறந்த ஆய்வேடு என பல பரீட்சகரால் பாராட்டப்பட்டது. இதற்காக யாழ். பல்கலைக்கழகம் இவருக்குத் தம்பிமுத்து கனகசுந்தரம்பிள்ளை நினைவுப் பரிசினை வழங்கியது. சுந்தரம்பிள்ளை நடிகனாக மட்டும் நின்றுவிடாது பல மேடை நாடகங்களையும் எழுதி மேடையேற்றி வந்தார். கணக்கான அந்த வகையில் மேடையேற்றிய சமூக நாடகங்களையும் தரகர் தம்பர், தம்பி கடிக்கிறான், வாழ்வும் தாழ்வும், சினிமா மோகன், சித்திரமே சித்திரமே மற்றும் இதிகாச புராண நாடகங்களாக பக்த நந்தனன், கர்ணன், தமயந்தி, வல்வெட்டி விதுசன், சிற்பியின் காதல் பெரும்புகழ் பெற்றவையாகும்.

இவற்றோடு நாட்டுக் கூத்துகளான பாஞ்சாலிசபதம், மூவிராசாக்கள், மூத்தா மாணிக்கம்மா, காமன் கூத்து போன்றவை சிறப்பானவை.

சிறுவர் நாடகங்களையும் சுந்தரம்பிள்ளை மேடையேற்றியுள்ளார். அந்த வகையில் மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம். அந்த வகையில் 1998 ஆம் ஆண்டு மேடையேறியதைத் தொடர்ந்து பாவம் நரியார் என்ற நாடகம் 1998 ஆம் ஆண்டு மேடையேறியது.

இவ்வாறு இவரது கலைப் பணிகள் ஏராளமானவை. காரை சே.சுந்தரம்பிள்ளையின் பணி கலைப்பணி என்ற ரீதியில் கவிதை நாடகம் ஆய்வு மொழி பெயர்ப்பு என பல வகைகளிலும் மேலோங்கிக் காணப்படுகிறது. பெருங்கதை வல்லுனர்களாக விளங்கும் இவர், தமிழ் உலகிற்குக் கிடைத்த அரும் பெரும் சொத்தாகவே திகழ்கின்றார்.

இவரது பணி மேலும் மேலும் வளரவேண்டும் என்பது, தமிழ் கூறும் நல்லுலகத்தோர் அனைவரதும் அவா ஆகும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அவைஅறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### ஆனந்த சங்கரியின் அபத்த கருத்துக்கள்

அண்மைக்காலங்களில் மிக அபத்தமான அரசியல் அறிக்கைகளை குழப்பமான மனநிலையோடு, மற்றவர்களையும் குழப்பும் வகையில் அடிக்கடி விடுத்துவரும் தமிழ் அரசியல்வாதி, தமிழர்கூட்டணியின் மத்தியகுழுவால் பதவியிலிருந்து நீக்கப்பட்டபின்னரும் இன்னமும் தான் தான் தலைவர் என அடம்பிடித்தபடி இருக்கும் ஆனந்தசங்கரி அவர்களேயாவார்.

தமிழ்மக்கள் மிகவும்சிக்கலான அரசியல் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ள சூழலில், சமாதான நகர்வுகள் தென்னிலங்கையின் அரசியல் தலைமைகளின் அதிகாரப்போட்டியால் கேள்விக்குறியாகிவிட்டுள்ள நிலையில், தமிழர் தரப்பு அரசியல்வாதிகள் பொறுப்புணர்வுமிக்க ஒருமைப்பாட்டுடன் செயற்படவேண்டியது ஒருவரலாற்று அவசியமாகும்.

ஆனால், தமிழ்மக்களை கடந்த காலங்களில் அரசியல் ரீதியில் வழிநடத்தியது தாங்களேயென மார்தட்டும் அரசியல்வாதிகள் சிலர், இன்றைய முக்கியகால கட்டத்தில் எடுத்துள்ள நிலைப்பாடுகள், வெளியிடும் அரசியல் கருத்துக்கள்யாவும் ஒட்டுமொத்தமாக தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளுக்கான விடுதலைப்போராட்டத்தை கொச்சைப்படுத்துவதாகவும், அற்பத்தனமான சுயநல பதவிநோக்குடன்கூடிய அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கும் தன்மை கொண்டனவாகவும் இருப்பதுதான் வருத்தத்திற்குரியதும், ஆபத்தானதுமாகும்.

இந்தவகையில் நேரடியாகவே சிறிலங்காவின் அதிகாரபீடத்தைக் கைப்பற்றியிருக்கும் பேரினவாதக்கட்சிகளுடனும், அதன் ஆயுதப்படைகளுடனும் நேரடியாக தம்மை இணைத்துக்கொண்டு துணை அரசியல்வாதிகளாகவும், துணைப்படைகளாகவும் இயங்கும் குழுக்களை பொதுமக்கள் நன்கு அறிவர். அவர்கள் தங்களின் சுயத்தன்மையை தமது செயற்பாடுகள் மூலம் வெளிப்படையாகவே இனங்காட்டிக் கொண்டவர்களாவர். ஆனால் தமிழர் விடுதலைக்கூட்டணியும் ஏனைய தமிழ் அரசியலமைப்புக்கள் சிலவும் தமிழினத்தின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு ஒன்றிணைந்து செயற்படமுன்வந்து இயங்கத்தொடங்கியது காலத்தின் தேவையாகவே உணரப்பட்டது.

சமாதான முன்னெடுப்புக்களின்போதும், பேச்சுவார்த்தைகளின்போதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஏகோபித்த குரலில் சர்வதேச சமூகத்தின் முன்வைக்க தமிழ்தேசியக் கூட்டமைப்பு என்ற இந்த அமைப்பின் பணி அவசியமாக கருதப்பட்டதுடன், எதிர்கால அரசியல் நகர்வுகளுக்குள் இந்த அமைப்பு முக்கியமானதொன்றாக உணரப்பட்டது.

எனினும் தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவராக இருந்த ஆனந்த சங்கரி இந்தக் கூட்டமைப்பு ஆரம்பித்ததுமுதலே மாறுபட்ட கருத்துக்களையும், வேறுபட்ட நோக்கங்களையும் கொண்ட ஒருவராக விளங்கி வந்ததுடன, சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விடயங்களில் ஒருதிட்டவட்டமான நிலைப்பாட்டினை கூட்டமைப்பு எடுக்கத் தடையாகவும் இருந்தார்.

இதற்கு அவரின் அரசியல் சுயநல நோக்கங்களும் வேறு சில புறமேலாதிக்க சக்திகளின் அழுத்தங்களும் காரணமாக இருந்தது. என்பது வெளிப்படையான விடயமாகும்.

விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ளும் மிக முக்கியமான-சமாதான முன்னெடுப்புக்களுக்கு மிக மிக அவசியமான கூட்டமைப்பின் ஏகோபித்த தீர்மானத்தின் அடிப்படையிலான கோட்பாட்டுடன் அவர் ஒத்துவருபவராக இல்லை,

இதற்கு அவர்மீதான, மேலே குறிப்பிடப்பட்ட புற அழுத்தங்களின் காரணமாக அவருக்கு ஏற்பட்ட அச்சமும் அரசியல் சுயநலன்களுமே காரணம் என்பது அவர் மறுத்தாலும் நிராகரிக்க முடியாத உண்மையாகும்.

அவரின் இந்த நிலைப்பாடும் ,வேறுசில முரண்பாடுகளும் கூட்டணிக்குள் அவர் மீதான நம்பிக்கையை இழக்க வைத்ததுடன் அவரைத் தலைமைப்பதவியில் இருந்து அகற்றும் முடிவையும் எடுக்க வைத்தது ஆனால், அவர் கதிரையை விட்டு இறங்கத் தயாராகவில்லை என்பது ஒருபுறமிருக்க, தனது ஒரு காலத்து நெருங்கிய சகாக்களான கூட்டணி எம்.பி.க்கள் சிலர் விடுதலைப் புலிகளின் தூண்டுதலின் பேரில் தன்னைப் பயமுறுத்தி வருவதாகப் புலம்பியுள்ளமைதான் வினோதமானது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு தனியான அமைப்பு, விடுதலைப் புலிகளின் ஒரு பிரிவோ அமைப்போ அல்ல. அதில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு தனியான அங்கம்.... அது தனது தலமையை மாற்றவோ, நீக்கவோ சுயாதீனமாக முடிவெடுக்கக்கூடிய ஒன்றுமாகும். அப்படி இருக்கும்போது தனக்கும் தனது சாக்களுக்குமிடையிலான கருத்தியல் முரண்பாடுகளுக்கு விடுலைப் புலிகளே காரணம் என்று சொல்வதும், விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளெனக் குறிப்பிட்டு அவர்களை அமெரிக்கா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. என மிரட்டியிருப்பதுதான் வேடிக்கையானதும் அவரது நிலையற்ற கொள்கையுணர்வை வெளிப்படுத்தியுள்ளதுமாகும்.

அது மட்டுமல்ல விடுதலைப் புலிகளை சர்வதேச நாடுகள் நிர்மூலமாக்கிவிடுவார்கள் என கூறியிருப்பதானது அவரது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்திவிட்டது. யார் இவரை இப்படியெல்லாம் ஊளையிட வைத்தார்கள் என்பதை அவரது மனச்சாட்சியே அறியும். அரசியல் தெளிவுள்ள மக்களும் அறிவர்.

அது மட்டுமல்ல வரலாற்றில் தனக்கான இடத்தையும் அவர்களே முடிவுசெய்து விட்டார்கள் என்பதை ஆனந்த சங்கரியும் அறியவே செய்வார்.

## நாடும் நடப்பும்




செய்தி : புற அழுத்தங்களின் அச்சத்தில் புலம்ப ஆரம்பித்துள்ளார் ஆனந்தசங்கரி : கூட்டணி ஆதரவாளர்கள் கருத்து

# புதுவருட தினத்தை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்!

## போக்குவரத்தைக் கண்காணிக்க நடவடிக்கை

(கொழும்பு)

புதுவருடத்தையொட்டி கொழும்பு நகரில் பொலிஸார் தீவிரமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகவும், மேலதிக பொலிஸார் பாதுகாப்பிற்காகக் கொழும்புநகர் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் குவிக்கப்பட் டிருப்பதாகவும் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

வருட இறுதித்தினமான டிசெம்பர் 31 ஆம் திகதி மற்றும் புதுவருட தினங்களில் கடந்த காலங்களில் கொழும்பு நகர வீதிகளில் குற்றச்செயல்கள் அதிகரித்திருந்ததைக் கவனத்தில் கொண்டே பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

40 பொலிஸ் அதிகாரிகள் சிரேஷ்ட போக்குவரத்து முகாமைத்துவ கற்கைநெறியை முடித்துக்கொண்டு, கொழும்பு நகரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் போக்கு வரத்து விதிகளை மீறி வாகனங்களைச் செலுத்துவோரைக் கண்டுபிடிக்க நவீன கருவிகளையும் பயன்படுத்தவுள்ளனர்.

கொழும்பு நகரை அண்டிய பாணந்துறை, களனி, கம்பஹா மவுண்ட்லவனியா போன்ற இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதேவேளை, இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதிமுதல் டிசெம்பர் 19 ஆம் திகதிவரை 1630 வீதிவிபத்துகள் இடம்பெற்றதாகவும், 1765 பேர் மரணமடைந்ததாகவும் பொலிஸ் தலைமையகப் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரியான சப் இன்ஸ்பெக்டர் கே.சேனாதீர தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு 2160 வீதி விபத்துக்கள் இடம்பெற்றதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மாகாணசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

## தேர்தல் திணைக்களம் நடவடிக்கை

ஏழு மாகாணசபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

2001 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டின் அடிப்படையிலேயே, மாகாணசபைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அடுத்தவருடம் நடைபெறவுள்ள ஏழு மாகாணங்களுக்கான தேர்தலில் புதிய நடைமுறைப்படியே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று உதவித் தேர்தல் ஆணையாளர் கே.சேனாநாயக்க தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபைகளுக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 2001 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீடு வடக்கு - கிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்படாததனாலேயே இந்த அதிகரிப்புக்குறித்து தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதிகரிக்கப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் - மேல் மாகாணசபைக்கு 139 உறுப்பினர்களும், மத்திய மற்றும் தென்மாகாணசபைகளுக்கு தலா 67 உறுப்பினர்களும், வடமத்திய மாகாணத்திற்கு 38 உறுப்பினர்களும், சப்ரகமுவ மாகாணத்திற்கு 49 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அடுதத மாகாணசபைத் தேர்தல்கள் - இந்த எண்ணிக்கையின அடிப்படையிலேயே நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் தீர்வுப்பொதியை ஜே.வி.பியும் ஏற்றுள்ளது!

## கட்சி வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட தீர்வுப்பொதியை ஜே.வி.பியும் ஏற்றுக்கொண்டுள்ளதாக அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக ஜனாதிபதி 2000 ஆம் ஆண்டு தீர்வுப்பொதி ஒன்றை முன்வைத்திருந்தார். இதனை ஜே.வி.பி. தொடர்ந்து எதிர்த்து வந்தது.

தற்போது சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைப்பதற்கு இரு கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டிருந்தன.

இதனையடுத்து ஜே.வி.பி - ஜனாதிபதி முன்வைத்த தீர்வுப்பொதியின் அடிப்படையில், இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படவேண்டும் என மக்கள் விரும்பின், அதனை ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ளும் என இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# இந்தியா - இலங்கைக்கு இடையே நுண்ணலை தொலைத்தொடர்பு வசதி

## இன்றுமுதல் செயற்படும்.

(கொழும்பு)

இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையிலான நுண்ணலைத் தொலைபேசித் தொடர்பு இன்றுமுதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பி.ரி.ஐ.செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாகத் தடைப்பட்டிருந்த இந்த நுண்ணலைத் தொலைபேசிச் சேவையே மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

பிரதம தொலைத்தொடர்பு அதிகாரி ஷேகல் அனான் - நேற்று இந்த இணைப்புக் குறித்து இறுதிக்கட்டச் சோதனையை நடத்தினார்.

தலைமன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்கும் இடையில் தொடர்பினை ஏற்படுத்தக்கூடிய தொலைத்தொடர்புக் கோபுரங்களை அமைக்கும் பணி பூர்த்தியாகியதையடுத்தே, இன்று இந்தத் தொலைபேசிச் சேவை ஆரம்பித்துவைக்கப்படவிருக்கிறது.

கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கை அரசாங்கத்திற்கும், இந்தியாவின் பி.எஸ்.என்.எல்.நிறுவனத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமையவே இந்தத் தொலைத்தொடர்புசேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

சர்வதேச அரசியல்...

கே.ரீ.கணேசலிங்கம்

# கேணல் கடாபியின் அரசியல் தந்திரம் தப்பிப் பிழைக்குமா?

'அரசியலில் நிலைத்து நிற்பதற்கு அதிகார பலம் மட்டும் போதாது. அதிகார பலத்தோடு தந்திரமும், இராஜதந்திரமும் அவசியமானது. தந்திரமில்லாத அரசியல் தலைமையின் அரசியல் - கேள்விக்குறிபோல் நாணி, கூனி, குறுகி அழிந்துவிடும்'. இது ஒரு கலையாகும். இத்தகைய கீழைத்தேச அரசியல் தலைமைகளைக் காட்டிலும், மேற்குதேச அரசியல் தலைமையிடம் பலமாகவுள்ள ஆயுதமாக உள்ளது. ஆயுதபலத்தையும், அதிகாரபலத்தையும் இழந்துபோன பல ஐரோப்பிய அரசியல் தலைமைகள்- தந்திரபலத்தால் ஆட்சியையும், அதிகாரத்தையும் பிடித்த வரலாறுகள் எல்லாம் நடந்துள்ளன. ஆனால், கீழைத்தேச அரசியல் தலைமைகள்



தந்திரமாகச் செயற்பட்டாலும் குறுகியதாகவே அவை அமைந்திருப்பதைக் காணலாம். தனது பரம்பரை, தனது இனம், தனது நாடு, அரசியல் என்று குறுகிய வட்டத்திற்குள்ளேயே அவர்கள் இயங்குகின்றனர். மேற்குலகத்தவர்களிடம் - ஐரோப்பா அல்லது வெள்ளை இனம் அல்லது மேற்குலகம் என்ற பொதுமைப்படுத்தப்பட்டுள்ள நலன்களையே முதன்மைப்படுத்தும் தந்திரத்தைப் பிரயோகிக்கின்ற போக்கே காணப்பட்டது. இந்த வகையில லிபிய தலைவர் கேணல் கடாபியின் தந்திரம் எப்படியான நோக்கங்களையும், அதன் பயன்பாடுகளையும் கொண்டுள்ளது என்பதை இவ்வார உலக அரசியலில் நோக்குவோம்.

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசைன் - அமெரிக்கப் படைகளிடம் காட்டிக் கொடுக்கப்பட்ட பின்பு, லிபிய நாட்டுத் தலைவர் கடாபி தனது நாட்டின் அணுவாயுத தயாரிப்புக்கான நிலையங்களைச் சர்வதேச அணுவாயுதப் பரிசோதனைக் குழுக்களின் பரிசோதனைக்கு உட்படுத்தத் தயாராக இருப்பதாகவும், உயிரியல், இரசாயன ஆயுத உற்பத்தியை நிறுத்துவதாகவும் அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பு கடந்த ஒரு சில வருடங்களாக முக்கியத்துவம் குறைந்திருந்த லிபியாவையும், கேணல் கடாபியையும் உலக நாடுகள் மத்தியில் மீண்டும் நினைவுகூரச் செய்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் லிபியாவைப் பற்றி ஒரு சிறு வரலாற்றுக் குறிப்பையும் தெரிந்துகொள்ள முயல்வோம்.

புவியியல் அமைவில் வட ஆபிரிக்க பிரதேசத்தில் அமைந்துள்ள லிபியா, எகிப்து, சூடான், சாட், நைஜீரியா, அல்ஜீரியா, துனீசியா போன்ற நாடுகளை எல்லையாகவும், வடக்கே மத்திய தரைக் கடலையும் கொண்ட அரசாக லிபியா விளங்குகின்றது. 1759540 சதுர கி.மீ. பரப்பையும் கொண்ட லிபியா, 5.2 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட அரபு நாடாக விளங்குகிறது. 'சுனி' முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக கொண்டிருக்கும் லிபியாவில், றோமன் கத்தோலிக்கத்தின் செல்வாக்கும் காணப்படுகின்றது. காரணம் - லிபியா 1551 முதல் 1911 வரை துருக்கிய ஒட்டமன் இராச்சியத்திற்குள் இருந்தபின்னர், இத்தாலியின் காலனித்துவத்துக்குள்ளும், பின்னர் பிரித்தானிய காலனித்துவத்திற்குள்ளும் (1943) அகப்பட்டிருந்தது. 1951 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் தீர்வின்கீழ், சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. அப்போது லிபியா மூன்று மாகாணங்களைக் கொண்ட (**Tripolitania, Cyrenaica, Fezzan**) சமஷ்டி ஆட்சிமுறையுடைய அரசாக உருவாக்கப்பட்டது. அப்போது பிரித்தானிய - அமெரிக்க செல்வாக்குடன் முகமட் இடிஸ் அல் சனுசி ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுடன், தன்னை மன்னனாகவும், பின்னர் பிரகடனப்படுத்திக் கொண்டார். இன்று பிரதான ஏற்றுமதிப் பொருளாக விளங்கும் நிலநொய் - 1959களிலேயே பெரியளவில் வெளிநாட்டு உதவிகளுடன் கண்டு பிடிக்கப்பட்டு ஏற்றுமதிக்குரிய வாய்ப்புக்களை விரிவாக்கிக்கொண்டது. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் பொருளாதார தொழில்நுட்ப உதவியை லிபியா பெற்றதுடன், அந்த நாடுகளின் இராணுவ வாய்ப்புக்களுக்கு ஒத்துழைப்பும் வழங்கியது. 1963 களில் சமஷ்டிமுறை நீக்கப்பட்டதும், அமெரிக்க பிரித்தானிய நலன்கள் பெருகியதும், கேணல் கடாபியின் எழுச்சிக்கு வித்திட்டது. இளம் தளபதிகளைக் கொண்ட சபையின் புரட்சியை தொடர்ந்து, அமெரிக்க- பிரித்தானிய நலன்களும், இராணுவத்தளங்களும் லிபியாவிலிருந்து அகற்றப்



© Lonely Planet

பட்டன. 1969 செப்ரெம்பர் முதல் கடாபியே லிபியாவின் தலைவராக உள்ளார். எகிப்து, சிரியா போன்ற நாடுகளோடு இணைந்து உருவாக்கிய உடன்பாட்டின்கீழ், இஸ்ரேலுக்கு எதிரான கொள்கையைக் கொண்டவராகக் கடாபி விளங்கினார். அரபுலக தேசியத்தை உருவாக்க விளைந்த தலைமைகளில் எஞ்சியுள்ள ஒருவராக இருப்பவர் கடாபி என்பது குறிப்பிடத்தக்கது.

இனி விடயத்துக்கு வருவோம்-

பிராந்தியத்தில் இஸ்ரேலின் எதிர்ப்புவாதியும், சர்வதேசமட்டத்தில் அமெரிக்காவின் எதிரியுமான கடாபி -அமெரிக்காவாலும், பிரித்தானியாவாலும் பாராட்டப்பட்டுள்ளார் என்பது அதிர்ச்சியளிக்கும் செய்தியாகவே அமையும். அதுமட்டுமன்றி, லிபியாவைப் பின்பற்றி இஸ்ரேலும் ஏனைய நாடுகளும் செயற்படவேண்டுமென அமெரிக்க - பிரிட்டிஷ் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது இஸ்ரேலின் இராஜதந்திரத்தின் வரலாற்றில் ஏற்பட்டுள்ள நெருக்கடியாகவே அமைந்துள்ளது. எனவே, கடாபியின் அறிவிப்பின் முதல் எதிர்பார்க்கை கணிசமான தாக்கத்தை ஏற்படுத்திவிட்டதென்றே கூறலாம். ஒன்று பிரித்தானிய, அமெரிக்க தலைமைகள் கடாபியின் அறிவிப்பை வரவேற்றமை- கடாபிக்குக் கிடைத்த வெற்றியாகும். அவ்வாறே இஸ்ரேல்மீது அமெரிக்கா, பிரித்தானியா மட்டுமல்ல, மேற்காசிய நாடுகள் பலவும் அழுத்தம் கொடுக்கும் அரசியல் நடவடிக்கையில் இறங்கியுள்ளன. இதனால், முழு மேற்காசியாவிலும் இஸ்ரேலுக்கு எதிரான உணர்வலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கடாபி - சதாம் உசைன் அடைந்த நிலையை அனுபவபூர்வமாகக் கற்றுள்ளதையே இது காட்டுகிறது. சதாம் - அமெரிக்காவை எதிர்க்க முயன்று இறுதியில் நாடு, மக்கள், பதவி என்பவற்றை இழந்ததுபோல் அல்லாமல், அமெரிக்கர்கள் முன்வைக்கும் தடைகளைப் படிக்கற்களாக்கி கடாபி பாதை அமைக்கத் தொடங்கிவிட்டார். ஆனால், கடாபி -அமெரிக்கா களின் பக்கபலத்தோடு மேற்காசியாவை ஆட்டிப்படைக்கும் இஸ்ரேல்மீதும் தனது தந்திரத்தின் ஒரு பக்கத்தைப் பிரயோகித்திருககிறார். ஆனால், கடாபியின் தந்திரத்திற்கு இஸ்ரேல் மசியுமா என்பது அடுத்த கேள்வியாகும். இஸ்ரேல் ஒரு வகையான இராஜதந்திர நெருக்கடியை எதிர்கொண்டாலும், மறுபக்கத்தில் அமெரிக்காவின் அணுகுமுறையும், இஸ்ரேலின் தந்திரமும் கடாபி எதிர்பார்ப்பது போன்ற பயனை ஏற்படுத்துமா என்பது சந் தேகமாகவேயுள்ளது. ஏனெனில், கடாபியின் அறிவிப்புக்குப் பின்னர் இஸ்ரேல் வெளியிட்ட செய்திகளில் தனக்கு முன்னுள்ள பிரச்சினைகளைப் பட்டியலிட்டுள்ளது. பலஸ்தீனப் போராளிகளது தற்கொலைத் தாக்குதல்கள், அரபு நாடுகளது தன்மீதான தாக்குதல் தொடர்பான அச்சம், முழு இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புக்களும் இஸ்ரேலைத் தாக்கத் திட்டமிட்டிருப்பது எனப் பல பிரச்சினைகளை முன்வைத்துள்ளது. இதனால், ஆயுதப் பரவல் தடைக்குள் (**WMD**) லிபியா போன்று இஸ்ரேல் உடனடியாக ஈடுபடமுடியாதெனக் கூறியுள்ளது.

இஸ்ரேல் உலகத்திலேயே ஐந்தாவது அணுவாயுத அரசென்பதும், 200 இற்கு மேற்பட்ட அணுவாயுத நிலைகளைக் கொண்டது என்பதும் தெரியவந்துள்ளது. அதேபோன்று, உறுதிப்படுத்தாத தகவல்களின்படி - தற்பாது காப்புக்கான இரசாயன ஆயுதங்களைத் தயாரிக்கும் வலுவையுடையதெனவும், உயிரியல் ஆயுதங்கள் உற்பத்திக்கான நிகழ்ச்சித் திட்டத்தைக் கொண்டிருக்கிறது எனவும் அமெரிக்க காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது. இத்தகைய அணுவாயுத, இரசாயன, உயிரியல் ஆயுதங்களைக்கொண்ட குண்டுகளையும், ஏவுகணைகளையும் இஸ்ரேல் பல இடங்களில் வைத்திருப்பதாகவும் ரெல் அவிவ் இதில் முக்கியமான இடமாகமுள்ளது எனவும் தெரிய வந்துள்ளது. எனவே, கடாபியின் தந்திரம் பலிக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

கடாபியின் அடுத்த பிரதான இலக்கு அமெரிக்கா மற்றும் பிரித்தானிய அரசுகளின் எதிர்ப்பை முறியடித்து, தந்திரமாக ஆட்சியையும், தனது அதிகாரத்தையும் தக்கவைப்பதாகும். கடாபியின் அறிவிப்பையடுத்து லிபியாவுக்கு விஜயம் செய்த ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் - அணுவாயுதம் தயாரிக்கும் திறன் லிபியாவிடம் இருக்கக்கூடியதற்கான எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என அறிக்கை விடுத்துள்ளனர். இது கடாபியின் தனிப்பட்ட நலன்களைப் பாதுகாக்கக்கூடியதான அறிக்கையாகவே அமைந்துள்ளது. லிபியா மீதான ஆபத்தான அணுகுமுறைக்குப் பதிலாக - அமெரிக்கா, பிரித்தானியா என்பன மென்மையான அணுகுமுறையைப் பின்பற்றுவதற்கு ஐ.நா ஆயுதப் பரிசோதகர்களது அறிக்கை வாய்ப்பாக அமையும். அதனால், கடாபியின் ஆட்சிக்கு - சதாம் உசைனின் ஆட்சிக்கு ஏற்பட்டதுபோல் ஆபத்து நிகழாது என்பதற்கு ஓரளவு சாதகமான வாய்ப்பே உருவாகியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் சதாமுக்கும், கடாபிக்குமுள்ள பொதுவான இயல்புகளை நோக்குதல்வேண்டும்.

சதாம் எப்படி காசிமை அழித்துவிட்டு ஆட்சிக்கு வந்தாரோ, அதேபோன்று ஆனால் சற்று வித்தியாசமாக முகமட் இடிஸ் அல்சானுசிலை, தளபதிகளைக் கொண்ட புரட்சிக் குழுவால் இராணுவத்தின் புரட்சியின் மூலம் அகற்றி ஆட்சியைப் பிடித்தவர் கடாபி. சதாம் போன்று அல்லாமல் ஆரம்பத்திலிருந்து அமெரிக்கா சார்ந்த மேற்குலகின் எதிரியாகக் கடாபி செயற்பட்டவர். சதாம் ஆரம்பத்தில் அமெரிக்காவின் நேரடி நண்பனாக இல்லாவிட்டாலும், 1970 களுக்குப்பின் நெருக்கமான இராணுவ ஒத்துழைப்புக்களும், உதவிகளும் சதாமுக்கு அமெரிக்காமூலம் கிடைத்திருந்தது. ஆனால், கடாபி தனது ஆட்சியின் இன்றைய நிலைக்கு முன்பு, முழுவதையும் அமெரிக்க எதிர்ப்புக்காகவே பயன்படுத்தியவர். சதாம் இறுதியில் அமெரிக்காவிடம் சரணடைய மறுத்தார். ஆனால், கடாபியோ இறுதிக்காலத்தில் அமெரிக்க நட்பை நாடத் தொடங்கியுள்ளார்.

எனவே, சதாமைவிட கடாபி ஒருபடி மேல் சென்றுள்ளார். அதுமட்டுமல்ல சதாமின் குவைத் மீதான ஆக்கிரமிப்பைக் கண்டித்த முதல் அராபியத் தலைவராக விளங்கியவர். எனவே, இருவரது இயல்புகளும் வேறுபட்ட போதும், அமெரிக்கர்களின் பார்வையில் இதுவரை இருவரும் ஒரேவகையிலான எதிரிகளாகவே காணப்பட்டனர். சதாமைவிட கடாபியே இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு அராபிய நாடுகள் முழுவதும் உரமூட்டக் காரணமானவர். கடாபி ஒரு இஸ்லாமிய அடிப்படைவாத அரசாங்கத்தை லிபியாவில் உருவாக்கிக்கொண்டபோதும், தம்மை ஒரு சோசலிசவாதியாக, ஒரு தேசியவாதியாகக் காட்டிக் கொள்வதில் கவனம் செலுத்தினார். அமெரிக்க எதிர்ப்புவாதத்தைப் பரப்புவதன்மூலம், அத்தகைய இலக்குடையவராக லிபியாவில் மட்டுமல்ல, முழு உலகத்திற்குமே காட்டிக் கொண்டவர். இவையாவும் சதாமிலிருந்து கடாபியை வேறுபடுத்திக்காட்டுவதற்கு உதவியாக உள்ளன.

ஆனால், கடாபியின் இத்தகைய நகர்வு ஒரு ஆபத்தான நகர்வு என்பதை கணிப்பீடு செய்யத் தவறக்கூடாது. ஏனெனில், கடாபி போன்று உலகத்தில் பல தலைவர்கள் இந்த வகையான தந்திரத்தைப் பயன்படுத்தப் புறப்பட்டு - நாட்டையும் இழந்து, தமது தலைமையையும் பறிகொடுத்த வரலாறுகளை எல்லாம் காணமுடிகின்றது. அதாவது, அமெரிக்கா, பிரிட்டிஷ் போன்ற சக்திகள் தனித்து இராணுவ உபாயங்களுடன் தமது நகர்வுகளைச் செய்வதில்லை. மாறாக, பொருளாதார சுரண்டல்களை அல்லது சூறையாடல்களை நிறைவேற்றுவதற்கான சமூக சீரழிவுகளை தயார் செய்துகொள்ளவும் தயங்கமாட்டாதவர்கள். அத்தகைய சக்திகள் பொருளாதார வளமுடைய பிரதேசங்களைக் குறிவைத்தே தமது நகர்வுகளை மேற்கொள்வதுண்டு. கடாபியின் அரசியல் எச்சரிக்கை மிரட்டலைவிட, லிபியா அடங்கிய அரபுலகத்தின் பொருளாதாரத்தை சுரண்டுவதே அமெரிக்கா - பிரிட்டன் போன்ற சக்திகளது பிரதான இலக்காகவுள்ளது. கடாபி- இராணுவ நோக்கங்களுடன்தான் அமெரிக்க- பிரிட்டன் சக்திகள் நகருவார்கள் எனக்கருதி, லிபியாவைக் காட்ட முயற்சித்திருப்பாராயின், அதிக ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியவராக எதிர்காலத்தில் காணப்படுவார் என்பதில் சந்தேகமில்லை. மறுவளமாக எந்தப்பக்கத்தையும் எதிர்கொள்ளும் தயார்படுத்தலை கொண்ட நகர்வை கடாபி செய்வதால் மட்டுமே - நாட்டையும், அரசியல் தலைமைகளையும் தக்கவைக்கமுடியும். கடாபியின் பலத்தை விட - பலவீனத்தை அமெரிக்கர்கள் கணக்குப் போடத் தவறியிருக்கமாட்டார்கள். தற்போது கிடைத்துள்ள ஓட்டையைப் பயன்படுத்தி, லிபியாவை துடைத்தெடுக்கும் திட்டமிடலுடன் அவர்களது உளவுத்துறை நகர்ந்திருக்கும்.

எனவே, இன்றுள்ள மிகப்பிரதானமான பிரச்சினை - அமெரிக்க எதிர்ப்புவாதத்திற்காக வெளிப்படுத்திய நாடுகளை - அமெரிக்க மயப்படுத்தலுக்குள் உட்படுத்துவதே அமெரிக்க சக்திகளின் நோக்கமாக உள்ளது. அமெரிக்காவுக்கு ஆதரவாக நடந்துகொள்வதென்பதோ, அமெரிக்காவின் நண்பனாக நடந்து கொள்ள முயல்வதோ - அராபிய நாடுகள் உட்பட்ட உலகத்திற்கு அச்சுறுத்தலான அம்சமாக மாறிவிடுகின்றது. லொக்கபி விவகாரத்தை கடாபி கையாண்டவிதமும், அதன் விளைவுகளும் மாதிரி அணுவாயுத பரிசோதனைக்கான நகர்வு அமையாது. அது நாட்டுக்கு வெளியே நிகழ்ந்த சம்பவம். இது நாட்டையே அகழ்வு செய்யும் சம்பவம். பொருளாதார சுரண்டல் மட்டுமல்லாது, அத்தகைய சுரண்டலுக்குப் பக்கபலமாக உள்ள அரசியல் சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமை எனப் படிப்படியாகப் பல மாறுதலை லிபியர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டிய நிலை ஏற்படும். அதனை எதிர்கொள்பவராகக் கடாபி தன்னை மாற்றிக்கொண்டால் மட்டுமே இத்தந்திரத்தால் தப்பிப்பிழைத்துக் கொள்ள முடியும். மேற்கைத் திருப்திப்படுத்தும் அரசியலை ஒரு வரையறையுடன் பேணிக்கொண்டு அவர்களது மறுசீரமைப்புக்களை உள் வாங்கி, தமக்கேற்ற வகையில் பயன்படுத்திக் கொண்டு விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் உள்ள மக்களைப் பக்கபலமாகக்கொண்டு செயற்படுத்துவதே கடாபி போன்ற தலைமைகளுக்கு இலாபகரமான விடயமாகும். ■

**அரசியலில் நிலைத்து நிற்பதற்கு அதிகாரபலம் மட்டும் போதாது. அதிகார பலத்தோடு தந்திரமும், இராஜதந்திரமும் அவசியமானது. தந்திரமில்லாத அரசியல் தலைமையின் அரசியல் கேள்விக்குறி போல் நாணி, கூனி, குறுகி அழிந்துவிடும்.**

### ஈரான் பூமி அதிர்ச்சி

# இடிபாடுகளுக்குள் சிக்குண்டவர்கள் உயிருடன் இருப்பது சாத்தியமில்லை!

## மீட்புப் பணியாளர்கள் தெரிவிப்பு



ஈரானில் பூமியதிர்ச்சியினால் கட்டட இடிபாடுகளுக்கிடையில் சிக்கியுள்ளவர்களை இனியும் உயிருடன் மீட்கலாம் என்ற நம்பிக்கையைத் தாம் இழந்துள்ளதாக, மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

400 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு மீட்புப் பணியாளர்கள் இறந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இடிந்த பெரிய கட்டடங்களை அகற்றும் பணியில், பாரிய புல்டோசர்களின் உதவியைக்கொண்டு இடிபாடுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் அனேகமான கட்டடங்கள் செங்கல், மண் கடடிகளினால் அமைக்கப்பட்டுள்ளதால், அவற்றுக்கிடையே இடைவெளிகள் காணப்படவில்லை எனவும், இதனால், இடிபாடுகளுக்கிடையே சிக்கியுள்ளவர்கள் உயிருடன் இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லையெனவும் - பி.பி.ஸி செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த ஜிம் முயர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் ரபிட் மீட்புப் பணியின் அங்கத்தவரான, யோன் கொலண்ட் குறிப்பிடும்போது - 80 வீதமான கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாரிய அளவிலான புதைகுழிகளில் இதுவரை 5000 பேரின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் ஈரானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நெடுமாறனின் பிணை இன்று மனுத்தாக்கல்

பூந்தமல்லி கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் பிணை மறுககப்பட்டுள்ள நிலையில், செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் பழ.நெடுமாறன் சார்பில் இன்று மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்படவுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தளபதியாக விளங்கிய கிட்டு குறித்து, காவியத் தலைவன் கிட்டு என்ற பெயரில் புத்தகம் எழுதியதற்காக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் மீது ஆலந்தூர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணையில் உள்ளது.

இதில் பிணைகோரி நெடுமாறன் மனுத்தாக்கல் செய்தார். மனு மீதான விசாரணை முடிவடைந்து தீர்ப்பு வழங்கப்படவிருந்த நிலையில், நீதிபதி மாற்றப்பட்டு விட்டார். இதைத் தொடர்ந்து பூந்தமல்லி கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நெடுமாறன் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அங்கு அவருக்கு பிணை மறுக்கப்பட்டுவிட்டது.

இதைத் தொடர்ந்து இன்று செங்கல்பட்டு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நெடுமாறன் சார்பில் மேல் முறையீட்டு மனுத்தாக்கல் செய்யப்படவுள்ளது. இந்த வழக்கில் பிணை கிடைத்தால் நெடுமாறன் உடனடியாக 16 மாத சிறைவாசம் முடிந்து விடுதலை ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு

# லிபியாவில் அணு ஆயுதப் பரிசோதனைக்கு ஐ.நா. சபை அதிகாரிகள் தயாராகின்றனர்



லிபியாவில் பேரழிவைத்தரும் ஆயுதங்கள் தயாரிப்பதற்கு பாவித்த இடத்தை பார்வையிடுவதற்கு ஐக்கிய நாடுகளின் அணுசக்தி தொடர்பான அறிஞர்கள் திட்டமிட்டுள்ளனர்.

தற்போது, லிபியாவில் தங்கியுள்ள ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணுசக்தி அமைப்பு, அந்நாட்டின் அணுசக்தி அமைப்புகள் தொடர்பான கணிப்பீடுகளை நடத்திவருகின்றது.

அணுசக்தி அமைப்பின் தலைவர் 'மொகமட் எல்பரடேய்' லிபியாவின் வெளிநாட்டமைச்சர் 'அப்டேல் ராமன் சல்கம்'மை சந்தித்துள்ளார். மேலும், அணுசக்தித் திட்டங்களுக்கு பொறுப்பாகவுள்ள 'மற்றுக் மொகமட்டை' நேற்று சந்தித்துள்ளார். இதனிடையே லிபிய ஜனாதிபதி கடாபியையும் சந்திப்பதற்கு எல்பரடேய் திட்டமிட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாடுகளிடையே லிபியா தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வந்ததனாலேயே கடாபி இந்த முடிவை எடுத்துள்ளதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், அணு ஆயுதங்கள் தொடர்பான பேச்சுக்களுக்கு தமது பூரண ஆதரவைத் தரவுள்ளதாக சல்கம் தன்னிடம் தெரிவித்ததாக அணுசக்தி அமைப்பு தலைவர் எல்பரடேய் தெரிவித்தார்.

### ஐரோப்பிய ஆணையத் தலைவர் பார்சல் குண்டுவெடிப்பிலிருந்து உயிர் தப்பினார்!

ஐரோப்பிய ஆணையகத்தின் தலைவர் ரமனோ புரோடி தனது பெயருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த புத்தகப் பார்சலொன்றை பிரிகக முற்பட்டவேளையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பிலிருந்து உயிர் தப்பியுள்ளார்.

இந்தச்சம்பவம் இத்தாலியின் வடபகுதி பொலொங்றா என்ற பிரதேசத்தில் அமைந்துள்ள அரவது இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த பார்சல் குண்டுத்தாக்குதலுக்குப் பொறுப்பாக உள்ளவர்களைத் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. புரோடி இத்தாலியின் முன்னாள் பிரதமமந்திரியாகப் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் நடந்த தாக்குதலில் அமெரிக்க படைச் சிப்பாய் பலி

பாக்தாத்தில் நேற்று நடைபெற்ற பாதையோரக்குண்டுத் தாக்குதலில் அமெரிக்கப்படையினர் ஒருவரும் இருசிறுவர்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். இச்சம்பவத்தில் அமெரிக்கப்படையின் ஈராக்கிய மொழிப்பெயர்ப்பாளரும் காயமடைந்தவருள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே - சனிக்கிழமை நடைபெற்ற தாக்குதலில் இரு தாய்லாந்தைச்சேர்ந்த படையினர் கொல்லப்பட்டிருந்தார்கள். வியட்னாம் போருக்குப் பின் தாய்லாந்துப் படையினர் வெளிநாடுகளில் கொல்லப்பட்டது இதுவே முதற்தடவையாகும்.

வெளிநாட்டுப்படையினரைக் கொல்வதன் மூலம் அமெரிக்கப்படைக்குத் துணையாக வெளிநாட்டுப்படையினரை சேர்த்துக்கொள்வதை தடுப்பதற்கான முயற்சியாக கருதப்படுகிறது.

இதனிடையே - நேற்று தாய்லாந்தில் அந்நாட்டு அரசுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலில் ஈராக்கில் பணிபுரியும் 422 தாய்லாந்துப்படையினரை மீண்டும் நாட்டிற்கு அழைக்கப்படவேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப்படையினர் ஈராக்கில் மருத்துவ மீள்கட்டுமானப்பணிகளுக்கு உதவுவதற்கென அனுப்பப்பட்டிருந்தார்கள். மேலும் இப்படையினரைத் தொடர்ந்து ஈராக்கில் பணியில் ஈடுபடுத்தவுள்ளதாக தாய்லாந்துப்பிரதமர் தெரிவித்துள்ளார்.

### 12 ஆண்டுகளுக்கு பின் பூத்த குறிஞ்சி மலர்!

மலைகளின் ராணியான ஊட்டியில், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிமலர் பூத்துள்ளது.

ஊட்டி மலைப் பகுதியில் 12, 7, 6,3, ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர் வகைகள் உள்ளன. தற்போது 12 ஆணடுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர் பூக்க ஆரம்பித்துள்ளது.

கல்லெட்டி என்ற பகுதியில் மேறகுத் தொடர்ச்சி மலைப் பகுதியில் இந்த வகை குறிஞ்சி மலர்கள் அதிக அளவில் பூத்துக் குலுங்குகின்றன். இவற்றை உள்ளூர் மக்களும், ஊட்டிக்கு வரும் மக்களும் மிகுந்த ஆர்வத்துடன் பார்த்து வருகின்றனர்.









ஈரானில் - பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட பாம் நகரில் உள்ள, 2000 ஆண்டுகள் பழமைவாய்ந்த கோட்டையின் வெவ்வேறு தோற்றங்களை முதல் மூன்று படங்களிலும், பூமியதிர்ச்சியில் அழிந்துபோன கோட்டையை ஆவது படத்திலும் காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கிறிஸ்தவ தேவாலயங்கள்மீது நேற்று இரண்டு தாக்குதல்கள்!

நாகொட பிரதேசத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ மத்திய நிலையமும், கத்தோலிக்க தேவாலயம் ஒன்றும் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து பாதுக்க பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

நாகொட தெக் தசெக்ம பிரதேசத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ மத்திய நிலையம், நேற்றுக் காலை சிலரால் தாக்கப்பட்டது.

இத்தாக்குதல் காரணமாக அங்கிருந்த 82 கதிரைகளும், 3 மின்விசிறிகளும் கட்டடமும் முற்றாக சேதத்துக்குள்ளாகியுள்ளதாக நிலையப் பொறுப்பாளர் கூறினார்.

இந்த நிலையத்திற்கு அருகில் உள்ள பன்னிப்பிட்டிய பங்குக்குரிய லூது மாதா தேவாலயத்திற்கும் நேற்றுக் காலை சிலர் தாக்குதல் நடத்தினர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக, பாதுக்க பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி ரி.ஏ.எஸ்.நிசாந்த தெரிவித்தார்.

இதேவேளை, கிறிஸ்தவர்கள் அமைதியாக இருக்கவேண்டுமென கிறிஸ்தவ சமய விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க கோரிக்கை விடுத்தார். அத்துடன் இச் சம்பவம் குறித்து நியாயமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் கேட்டுள்ளார்.




'பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்றது சரியாத்தான் இருக்கு மணியம்'

'என்ன திடீரென்று பழமொழியிலை விழுந்திட்டாய்... விபரமாய்ச் சொன்னாத்தானே விளங்கும் கனகண்ணை...'

'அபிவிருத்தி புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் என்றெல்லாம் அடுக்கடுக்காய் எவ்வளவு திட்டங்களை அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் முன்வைச்சு தமிழ் மக்களை வானம் பிச்சுக்கொண்டு வளத்தைக் கொட்டப் போகுதென்று வாய் பிளந்து பார்க்க வைச்சினம்...'

'ஓ... அதுக்கென்ன இப்போ... அங்கை இவ்வளவு செ[illegible]த்தோம். அதைச் செய்தோம்.... இங்கை இவ்வளவு கொடுத்தோம் இதைச் செய்தோம்.... இன்னும் வெளிநாட்டிலயிருந்து மில்லியன்களாகக் கொண்டுவந்து கொட்டப்போறம் பாருங்க என்று சொல்லிக்கொண்டு தானே அரசாங்கம் இருக்குது.'

'சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு மதி என்ன?'

'பிறகும் பழமொழி... விசயத்துக்கு வாவன்...'

'குடாநாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஒரு சதமும் தரவில்லை என்று அரசாங்க அதிபர் உண்மையைப் போட்டு உடைச்சிட்டாரெல்லே... அதுவும் கடந்த இரு வருசமாக ஒரு மண்ணாங்கட்டியைக் கூட ஒதுக்கேல்லையாம்...'

'அதுசரி... குடியிருக்க சொந்த இடத்தையே படைகளிட்ட இருந்து பறிச்சுத் தர வக்கில்லாத அரசு... அபிவிருத்திக்குக் காசு தரும் என்று நம்பலாமோ...'

'ஏட்டுச் சுரைக்காயே கறிக்குதவாது கனகண்ணை... இது பேச்சுச் சுரைக்காய் கைக்குக் கிட்டாது... அரசை நம்பினா அரசமரத்தடியும் தங்கமாய்க் கிடைக்காது பார்...'

## சிறுவர்நலன் தொடர்பான கலந்துரையாடல்

சிறுவர் நலத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி அரச செலகத்தில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த கலந்துரையாடலானது - யுனிசெவ், த்மிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பனவற்றின் ஏற்பாட்டிலே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதமாற்றத் தடைச் சட்டம் விரைவில் கொண்டுவரப்படும்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கண்டி)

மதமாற்றத் தடைச்சட்டம் - நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் துணையுடன் கொண்டுவரப்படவுள்ளதாக, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்னவைச் சந்தித்த பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ செய்தியாளர்களிடம் பேசினார்.

மதமாற்றத் தடைச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு, தியவதன நிலமே மற்றும் முக்கிய பௌத்த பிக்குகள் உள்ளிட்ட ஏனைய மதத் தலைவர்களின் வேண்டுகோள்களே காரணமாகும்.

பௌத்த மதத்திலுள்ள நெகிழ்வுப் போக்கைப் பயன்படுத்தி, ஏழை மக்களை மதமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## தேசியபிரச்சினை...

வல்துறை அமைச்சைப் பொறுத்த வரையில் அதில் காணப்பட்ட விரும்பத் தகாத பல விடயங்கள் தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றது. அடுத்த வருடம் நாட்டில் பல தேர்தல்கள் இடம்பெறஇருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(01)

## காணாமற்போனோர்..

சு.சற்குணம் தெரிவித்தார்.

முன்னதாக இவர்களுக்கான பயண ஏற்பாட்டுக்கான நிதியினை அமைச்சர் மகேஸ்வரன் வழங்கியிருந்தார்.

சற்குணம் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் புதன்கிழமை தாம் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்க விரும்புவதாகவும் தெரிவித்தார்.

# கூட்டணி உறுப்பினர்கள் நேற்றுமுதல் உண்ணாவிரதம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் சிலர், கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர்கள் - பேதங்களைக் கைவிட்டு ஒற்றுமையுடன் செயற்பட வேண்டுமெனக் கோரியே இவர்கள் உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ள உண்ணாவிரதத்திற்கான ஏற்பாடுகளை, தந்தை செல்வா நற்பணி மன்றம் மேற்கொண்டுள்ளது.

தமிழர் மக்களின் உரிமைகளுக்காக தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, இரண்டாகப்பிரிய அனுமதிக்கப்போவதில்லை என, உண்ணாவிரதப்போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

# விபத்தில் காயமடைந்த முதியவர் ஆறு நாட்களின் பின் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் செவ்வாயன்று இடம்பெற்ற லொறிவிபத்தில் காயமடைந்த முதியவர் நேற்று மரணமானார்.

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை - லொறி, சைக்கிளில் வந்த முதியவருடன் மோதியது. இந்தச்சம்பவத்தின் போது நாகமணி சிவானந்தம் (வயது 60) என்ற முதியவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைபெற்றுவந்த சமயமே சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை மரணமடைந்தார்.

இந்த முதியவர் வாகனங்களைப் பழுதுபார்ப்பவர் ஆவார். இவர் தனது வேலைத்தளத்திலிருந்து மதிய உணவுக்காகத் தனது வீட்டுக்குச் சென்ற சமயமே மேற்படிச்சம்பவம் இடம்பெற்றது.

# புலிகள் தன்னைப் பயமுறுத்துவதாக...

பத்திரிகைக்கு ஆனந்தசங்கரி பேட்டியளித்திருந்தார்.

இதுதொடர்பாக 'நமது ஈழநாடு' இரா.சம்பந்தனுடன் தொடர்புகொணடு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து வெளியிடுகையில்,

சங்கரிக்கு எதிராக கூட்டணியின் மத்தியகுழு நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒன்றாக இணைந்து செயற்படவேண்டும் என கடந்த தேர்தலில் மக்கள் எமக்கு ஆணை அளித்துள்ளார்கள்.

ஆனால், அதற்கு மாறாக சங்கரியின் கூற்றுக்களும் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டு, நாம் எல்லோரும் ஒருமித்து தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு செயற்படக்கூடிய சந்தர்ப்பம் ஒன்று உருவாகியுள்ளது. அது இன்று ஒரு அத்தியாவசிய சேவையும்கூட.

இவ்வாறான இந்த ஒற்றுமைக்கு குந்தகமாக சங்கரியின் கூற்றுக்களும் கருத்துக்களும் செயற்பாடுகளும் அமைகின்றது. இவ்விதமாக மக்கள் எமக்களித்த ஆணைக்கு எதிராக இவரது செயற்பாடுகள் அமைந்ததால் கூட்டணியின் மத்திய செயற்குழு இவர் மீது நம்பிக்கையில்லையெனத் தீர்மானம் நிறைவேற்றியது. இதுதான் காரணம். நாங்களோ, புலிகளோ அவரைப் பயமுறுத்தவில்லை. அது அவருடைய ஒரு கற்பனைக் கதையாகும். தமிழ் விடுதலை தொடர்பிலும் முரண்பாடான கருத்துக்களையே சங்கரி தெரிவித்தும் வருகின்றார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அவ்விதமாகச் செயற்படமுடியாது.

1999 ஆம் ஆண்டு நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டதன் பின் ஜனாதிபதி சந்திரிகாவிடம் நான் பாதுகாப்புக் கேட்டேனென சங்கரி கூறியுள்ளது மிகப்பெரிய பொய்யாகும்.

என்னுடைய பாதுகாப்பு நான் வணங்கும் தெய்வத்தின் கையிலேயே உள்ளது. அந்தப் பாதுகாப்பை சந்திரிகாவோ, ரணிலோ, விடுதலைப் புலிகளோ, ஆனந்தசங்கரியோ வழங்கமுடியாது.

கட்சித் தலைவர் என்ற வகையில் எனக்குச் சில பாதுகாப்பு ஒழுங்குகள் வழங்கப்பட்டது உண்மை. ஆனால் இவற்றை நான் கேட்டுப் பெற்றுக்கொள்ளவில்லை. நீலன் கொலைக்குப் பின்னர் எனது பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது உண்மை. அதனை நான் மறுக்கவில்லை. அது எனது வேண்டுகோளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதி சந்திரிகா தொலைபேசியில் கதைத்தபோது உங்களாலும் படையினராலும் என்னைப் பாதுகாக்கமுடியாது எனக் கூறினேன்.

எனவே இதுதொடர்பாக ஆனந்தசங்கரி இவ்வாறான கற்பனைக் கதைகளைக் கதைக்கத் தேவையில்லை. அவர் வீணாகப் புலம்புகிறார். மதிகெட்டுக் கதைக்கிறார் என இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஆனந்தசங்கரியின் பேட்டி குறித்து மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் எவரும் அப்படி அவரைப் பயமுறுத்தவில்லை. கொழும்பில் நடந்த கூட்டணியின் கூட்டத்தின் போது அவர்தான் ஒரு கூட்டத்தைக் கொண்டுவந்து ஒரு கொலை அச்சுறுத்தலை விடுப்பதுபோல செயற்பட்டார். நாம் எவரும் அவரைப் பயமுறுத்தவில்லை. விடுதலைப் புலிகளும் அப்படியொன்றையும் சொல்லவில்லை.

சங்கரியாருக்கும் தமிழ்த் தேசியத்திற்குமிடையில் 25 வருட இடைவெளியுள்ளது. அவர் 1972 ஆம் ஆண்டுக்குப் பின்னரேயே தமிழ்த் தேசியத்திற்கு வந்தவர் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவிக்கையில்,

நாங்கள் அவரைப் பயமுறுத்துவதென்று சங்கரியார் சொன்னதற்கு நான் எவ்வித கருத்தையும் கூற விரும்பவில்லை. ஏனெனில், அவர் சொல்வதையெல்லாம் சொல்லிக் கொண்டே போகட்டும். அவர் தன் தலையிலேயே மண்ணை அள்ளிக் கொட்டிக் கொண்டிருக்கிறார்.

அவர் என்ன சின்னப்பிள்ளையா, அவரை நாம் வெருட்டுவதற்கு? அவருக்குப் பின்னால் பல சக்திகள் உள்ளன. ஏசியன் ரிபியூன் எம்மிடம் பேட்டியெடுக்க வந்தால் நாம் சரியான விளக்கத்தை அவர்களுக்குக் கொடுக்கலாம். எல்லாவற்றையும் மக்கள் தீர்மானிப்பார்கள் எனத் தெரிவித்தார்.

ஆனந்தசங்கரியின் பேட்டி குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கருத்து வெளியிடுகையில்,

இதில் விடுதலைப் புலிகளுக்கோ, எமக்கோ எவ்வித சம்பந்தமும் இல்லை. மத்திய செயற்குழுவால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளதே ஒழிய தலைமைப் பதவியிலிருந்து அவரை விலக்கவில்லை. ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களில் அவரைத் தவிர மிகுதி ஆறுபேரும் ஓரணியாக உள்ளோம். சமாதானப் பேச்சுவார்த்தையை தற்போது விடுதலைப் புலிகளே முன்னெடுத்துச் செல்கின்றார்கள். எனவே அதற்கு நாம் ஏன் எதிராக நிற்கவேண்டும். அதற்கேற்றவாறே கட்சியும் தலைவரும் செயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

## உறுதியளித்த நிதியுதவியை...

டும் என்ற கோரிக்கையைக் கைவிடவில்லை.

பிரதமர் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையைக் கொண்டு நடத்தவேண்டுமெனில் - பாதுகாப்பு அமைச்சு அவரது கட்டுப்பாட்டிற்குள் இருப்பது அவசியமாகும். அவ்வாறு இல்லாமல் பாதுகாப்பு அமைச்சை பிரதமர் கைவிடுவாராகவிருந்தால் சமாதான முயற்சியையும் அவர் கைவிட்டவராவார்.

சர்வதேச உதவி என்பது எமக்கு மிகவும் முக்கியம். அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தையையும் நாம் இறுகிய நிலையில் வைத்திருக்க விருப்பமில்லை. ஆனால் இதன் கருத்து அதனை அலையவிடுவது என்பதல்ல.

அத்துடன் தற்போதய அரசியல் நெருக்கடியை நாம் விரைவில் தீர்த்தாகவேண்டும். இல்லையெனில் நாம் ஒரு பொதுத்தேர்தலுக்குத்தான் முகம் கொடுக்கவேண்டும்.

அவ்வாறு பொதுத்தேர்தலை நாம் சந்திப்போமாக இருந்தால் - அது பிரிவினைக்கும், இரத்தம் சிந்துதலுக்கும் தலைமை தாங்குவதாக அமைந்துவிடும். இது முன்னர் இருந்ததை விட கூடுதலான பிரச்சினைகளை உருவாக்கும்.

இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றாக இணைந்து செயற்படவேண்டும் ஆனால் இது உடன் சாத்தியமில்லை.

தற்கொலைத் தாக்குதல்களை நடத்திய விடுதலைப்புலிகளுடன், நாம் பேச்சுவார்த்தையை நடாத்தி வருகின்றோம். அவர்கள் அந்த நடவடிக்கையை தற்போது நிறுத்தியுள்ளார்கள். விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையில் நாம் தொண்ணூறு வீதமானவற்றில் உடன்பாடு கண்டுள்ளோம்.

விடுதலைப்புலிகள் மீளவும் யுத்தத்திற்கு செல்லமாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

எனவே, நாங்கள் காலத்தை வீணடிக்ககூடாது எனவும், விரைவில் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டுமெனவும் புலிகள் விரும்புகிறார்கள் எனவும் அமைச்சர் ரிரோன் பெர்னான்டோ மேலும் தெரிவித்தார்.

## தமிழகத்திலுள்ள அகதிகள்...

பாலம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசு மிகவும் விருப்பத்துடன் உள்ளது. இது குறித்து தனது முடிவை மத்திய அரசுக்கு தமிழக அரசு அறிவிக்க வேண்டும். இந்தப் பாலம் அமைக்கப்பட்டால் இரு நாடுகளுக்குமிடையிலான உறவு வளர்ச்சியடையும் அதேவேளை, கலாசார தொடர்புகளும் பாதுகாக்கப்படும்.

முஸ்லிம்களுக்கு விடுதலைப் புலிகள் தொல்லை கொடுப்பதாகத் தெரிவிக்கப்படுவது தவறு. முஸ்லிம்களுடன் புலிகள் நல்ல உறவையே பேணிவருகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்துவேறுபாடானது - நடைபெற்று வந்த சமாதானப் பேச்சுக்களை தடைசெய்துள்ளது. எனினும், இந்தக் கருத்துமுரண்பாடு நிரந்தரமானதல்ல.

பல்வேறு உள்ளூர், வெளியூர் அமைப்புக்கள் இருவருக்கும் இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்த முயற்சியெடுத்து வருகின்றன. அவை வெற்றியளிக்கும் சாத்தியங்கள் உள்ளன.

தமிழக அரசு எவ்வாறு இலங்கை அகதிகளை இங்கு அனுப்பிவைக்க வேண்டுமென விரும்புகின்றதோ, அவ்வாறே இலங்கை அரசாங்கமும் அவர்களை மீள அழைக்க விரும்புகின்றது.

இதற்காக இரு நாடுகளும் ஒன்றுபட்டுச் செயற்படும் அதேவேளை, மீள இலங்கையில் குடியேறும் மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டிய பொறுப்பும் இலங்கை அரசாங்கத்திற்கு உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.